Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

Soft View Computer Systems
For all your Computer Requirements
Computer Assembling & Sales
Maintenance, Repairing & Networking
Monitors, Printers, Scanners & UPS Repairing
Software Installations
CD Writing & Printing
No.778, Thaddatheru Junction,
K.K.S Road,
Jaffna,
Sri Lanka
☎-021-2225170

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 கார்த்திகை 12 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 றமழான் 22 (28.11.2002) வியாழக்கிழமை இதழ் : 58

# பூரண சுயாட்சித் தீர்வு; சாதகமாகப் பரிசீலிப்போம்!

## மாவீரர் தின உரையில் தலைவர் பிரபாகரன்



(கிளிநொச்சி)

**எமது தாயக நிலத்தில் எமது மக்கள் தம்மைத்தாமே ஆளக்கூடிய பூரண சுயாட்சி அதிகாரத்துடன் ஒரு தீர்வு முன்வைக்கப்பட்டால் நாம் அத்திட்டத்தைச் சாதகமாகப் பரிசீலனை செய்வோம். அதேவேளை எமது மக்களுக்கு உரித்தான உள்ளான சுயநிர்ணயம் மறுக்கப்பட்டு பிரதேச சுயாட்சி உரிமை நிராகரிக்கப்பட்டால் நாம் பிரிந்து சென்று தனி அரசு அமைப்பதைத் தவிர எமக்கு வேறு வழி இல்லை. இவ்வாறு நேற்று மாவீரர் தினத்தையொட்டி ஆற்றிய உரையில் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் குறிப்பிட்டார்.**

*அவரின் உரையின் முழுமையான வடிவம் வருமாறு:-*

எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய தமிழீழ மக்களே,

இன்றைய நாள் ஒரு புனித நாள். எமது மாவீரர்களின் நினைவு நாள். எமது இனத்தின் இருப்பிற்காக, தமது இன்னுயிரை ஈகம் செய்த உன்னதமானவர்களை, எமது நெஞ்சத்தின் நினைவாலயத்தில் நாம் நினைவு கூரும் நன்நாள்.

விடுதலை என்பது வாழ்வின் அதியுயர்ந்த விழுமியம். அந்த விழுமியத்தை இலட்சியமாக வரித்து, அதற்காக வாழ்ந்து, அதற்காகப் போராடி, அதற்காக மடிந்த எமது மாவீரர்கள் மகத்தான மனிதப் பிறவிகள். அவர்களது வாழ்வும் வரலாறும் எமது வீர விடுதலைக் காவியத்தின் உயிர் வரிகள்.

மாவீரர்களே,

தமிழர் தேசம் உங்களுக்குத் தலைவணங்குகிறது. உங்களது தற்கொடையால் தமிழீழ மக்கள் இன்று தலைநிமிர்ந்து நிற்கின்றார்கள். உங்களது இரத்தத்தாலும், வியர்வையாலும், உங்களது இலட்சிய உறுதியாலும் கட்டி

(02ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் துயிலும் இல்லங்கள் தோறும் என்றுமில்லாதவாறு மக்கள் வெள்ளம்!

(யாழ்ப்பாணம்)

தாயக விடுதலைக்காகத் தம் இன்னுயிர்களை ஈந்த மாவீரர்களின் நினைவாக மாவீரர் நாள் நேற்று வட-கிழக்கின் அனைத்துப் பகுதிகளிலும் மிகவும் எழுச்சியுடனும் உணர்வுபூர்வமாகவும் அனுஷ்டிக்கப்பட்டது.

என்றுமில்லாதவாறு இவ்வாண்டிற்கான மாவீரர் நாள் தமிழர் தாயகமெங்கும் வாழும் தமிழ் மக்களினால் மிகவும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது. அனைத்துப் பகுதிகளிலும் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களிலும் அனைத்து பொதுஇடங்களிலும் மாவீரர் நாள் நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன. இந்நிகழ்வுக

(10ஆம் பக்கம் பார்க்க)



## மாவீரர்களுக்கு பொதுச் சுடர் ஏற்றி தேசியத் தலைவர் பிரபா அஞ்சலி

(நமது நிருபர்)

தாயக விடுதலைக்காக தம்முயிர்களைத் தியாகம் செய்த மாவீரர்கள் நினைவாக நேற்றைய தினம் தமிழீழத் தேசியத்தலைவர் வே.பிரபாகரன் பொதுச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினார்.

வன்னியில் சிறப்பாக அமைக்கப்பட்ட மாவீரர் நினைவரங்கில் தளபதிகள், போராளிகள் சகிதம் - பொதுச் சுடரைத் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் ஏற்றிவைத்தார்.

இதேபோல வட - கிழக்கின்

(10ஆம் பக்கம் பார்க்க)





SERENDIB
எமது முகாமைத்துவம் உள்நாட்டில் மட்டுமல்ல, சர்வதேசத்திலும் உள்ளது!
விமான சேவை
J/FT/P - 021 - 2223916, 0777 - 801038,
CMB 505632 - 390128 - 0777-517019
(சி-148)

# பூரண சுயாட்சித் தீர்வு....

யெழுப்பப்பட்ட எமது விடுதலை இயக்கம், இன்று யாராலும் வெற்றி கொள்ள முடியாத மாபெரும் போராட்ட சக்தியாக உலகப் புகழீட்டி நிற்கிறது. போர் அரங்கில் நீங்கள் படைத்துச் சென்ற மகத்தான சாதனைகளையே இன்று உலகரங்கில், நாம் அரசியல் வெற்றிகளாக அறுவடை செய்து வருகின்றோம்.

## காலத்துக்கேற்ப விடுதலைப் பாதையை செப்பனிடுவது வரலாற்றின் கட்டாயம்



இன்று உலகம் மாறி வருகிறது. உலக ஒழுங்கும் மாறி வருகிறது. உலக நாடுகளின் உறவுகளும் மாறி வருகின்றன. மனித சமுதாயம் முன்னென்றும் காணாத புதிய சவால்களுக்கு முகம் கொடுத்து நிற்கிறது.

இன்றைய உலக நிதர்சனத்தை, அதன் யதார்த்தப் புறநிலைகளை நாம் உதாசீனம் செய்ய முடியாது. இன்றைய காலத்தையும், இக்காலத்தில் கட்டவிழும் சூழலையும் நாம் ஆழமாகப் புரிந்து, காலநிலை மாற்றங்களுக்கு ஏற்ப, எமது விடுதலைப் பாதையை செப்பனிடுவது அவசியம். இன்றைய காலத்தின் தேவை அது. உலகப் போக்குடன் முரண்படாது, உலக வரலாற்றின் ஓட்டத்திற்கு இசைவாக, நாமும் எமது போராட்ட வரலாற்றை முன்நகர்த்திச் செல்வதே விவேகமானது. இன்றைய வரலாற்றின் கட்டாயமும் அதுவே.

எமது விடுதலைப் போராட்டம் கால்நூற்றாண்டுகால வரலாறாக நீட்சிபெற்றுச் செல்கிறது. இருபது ஆண்டுகளுக்கு முன் இன்றைய நாளில், எமது முதலாவது மாவீரன் களப் பலி ஆகியதைத் தொடர்ந்து இன்று வரை பல்லாயிரக்கணக்கில் எமது போராளிகள் விடுதலைப் போரில் களமாடி வீழ்ந்திருக்கிறார்கள். எமது இனத்தைப் பேரழிவிலிருந்து பாதுகாத்து, எமது தாயக நிலத்தை அந்நியனிடமிருந்து மீட்டெடுக்க எமது விடுதலை இயக்கம் அளப்பரிய அர்ப்பணிப்புகளைச் செய்துள்ளது. எமது மாவீரர்களின் இம்மகத்தான தியாகங்களால், எத்தனையோ தடவைகள் நாம் பேரழிவுகளின் விளிம்பிலிருந்து மீண்டிருக்கின்றோம். மரணத்தின் வாயிலுக்குச் சென்று மறுபிறவி எடுத்திருக்கின்றோம். வல்லாதிக்க சக்திகளின் தலையீடுகளைத் தனித்து நின்று தகர்த்திருக்கின்றோம். எமது விடுதலை இயக்கம் இன்று வானளாவ வளர்ந்து நிற்கிறது. நிமிர்ந்து நிற்கிறது. எமது இயக்க விருட்சத்தின் வேர்களும் விழுதுகளுமாக நிற்பவர்கள் எமது மாவீரர்களே.

## புதிய வரலாற்றுத் திருப்பத்தில் நாங்கள் நிற்கின்றோம்!

எனது அன்பார்ந்த மக்களே,

இன்று எமது விடுதலைப் போராட்டம் ஒரு புதிய வளர்ச்சிப் பாதையில், ஒரு புதிய வரலாற்றுத் திருப்பத்தில் காலடி வைத்திருக்கிறது. என்றுமில்லாதவாறு இன்று ஒரு புதிய சவாலை நாம் சந்தித்து நிற்கின்றோம். போருக்கு ஓய்வு கொடுத்து, சமாதான வழியில், சமரசப் பேச்சுக்கள் வாயிலாக எமது மக்களின் இனப் பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சியில் நாம் ஈடுபட்டு வருகின்றோம். நாம் வன்முறையில் பற்றுக்கொண்ட போர் வெறியர் என்றும் சமாதானத்தின் விரோதிகள் என்றும், காலம் காலமாக சிங்களப் பேரினவாதிகள் மேற்கொண்டு வந்த பரப்புரையைப் பொய்யாக்கும் வகையில் நாம் நேர்மையுடனும் உறுதியுடனும் சமாதான வழிமுறையைத் தழுவி நிற்கின்றோம்.

ஆயுத வன்முறையில் ஆசைகொண்டு நாம் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிக்கவில்லை. இன அழிவை இலக்காகக் கொண்ட இனவாத ஒடுக்குமுறையின் உச்சத்தில், அந்நிய இராணுவ அடக்குமுறை சகிக்க முடியாத அளவிற்குத் தீவிரமடைந்த கட்டத்திலேயே நாம் ஆயுதம் ஏந்தினோம். எமது மக்களின் உயிரைக் காக்கவும், எமது மக்களின் உரிமையை நிலைநாட்டவும், எமது இயக்கம் மேற்கொண்ட ஆயுதம் தரித்த விடுதலைப் போரை பயங்கரவாதமாகச் சிங்கள அரசுகள் சித்தரித்தன. தமிழரின் உரிமைப் போரைத் திரிபுபடுத்தி, இழிவுபடுத்தி உலகடங்கிலும் விசமப் பிரச்சாரங்கள் முடுக்கிவிடப்பட்டன. இப்பொய்யான பரப்புரையை நம்பி, பல உலக நாடுகள் எமது அமைப்பிற்குத் தடை விதித்தன.பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தப்பட்டு உலக அரங்கிலிருந்து நாம் ஓரம் கட்டப்பட்டோம். உலக நாடுகள் ஒன்றுதிரண்டு எதிரியின் போர்த் திட்டத்திற்கு முண்டு கொடுத்தன. அனைத்து உலகத்தினதும் ஆதரவும், ஆயுத உதவியும் கிட்டியதால் மூர்க்கம் கொண்ட எதிரி போரைத் தீவிரப்படுத்தினான். நாம் தனித்து நின்று போருக்கு முகம்கொடுத்தோம். மக்களின் ஆதரவு மட்டும் எமக்கு மலையாக நின்றது. நாம் அலையலையாகத் திரண்டெழுந்து ஆக்கிரமிப்புப் படைகளுடன் மோதினோம். போர்க் கலையில் எமது வீரர்கள் படைத்த அபாரமான சாதனைகள் உலக இராணுவ நிபுணர்களையே திகைப்பில் ஆழ்த்தின. போரிற் புலிகளை வெற்றி கொள்ள முடியாது என்பதனைச் சிங்களத் தேசமும் உலகமும் உணர்ந்து கொண்டன. இந்தச் சூழ்நிலையில்தான், அதாவது எமது போராட்ட வல்லமையை நிரூபித்துக் காட்டி, எமக்குச் சாதகமான இராணுவ சமநிலையில் நின்றபடியே நாம் சமாதானத்தின் கதவுகளைத் திறந்தோம். சமாதானத்தில் எமக்கு உண்மையான பற்றுண்டு என்பதை உலகத்திற்கு உணர்த்திக் காட்டவே நாம் இராணுவ மேலாதிக்கநிலையில் நின்றுகொண்டு அமைதி வழியைத் தழுவினோம்.

## போர் ஓய்வுக்கு நாமே முன் முயற்சிகள் எடுத்தோம்!

போருக்கு ஓய்வு கொடுக்கும் விடயத்திலும் நாமே முன்முயற்சிகளை எடுத்தோம். ஒரு தலைப்பட்சமான போர்நிறுத்தப் பிரகடனம் செய்து, அரசாங்கத்தை அமைதி வழிக்கு அழைத்தோம். சமாதானத்திற்கான மனுவைப் பெற்று ஆட்சி பீடம் ஏறிய புதிய அரசு, எமது போர் நிறுத்த அறிவிப்பை ஏற்றுக் கொண்டது. இவ்வாண்டு பெப்ரவரி 23ஆம் திகதியிலிருந்து இரு தரப்பும் இணங்கிய போர் நிறுத்தம் சர்வதேச நாடுகளின் கண்காணிப்புடன் செயலுக்கு வந்தது. இப்போர்நிறுத்தம் கடந்த ஒன்பது மாதங்களாக கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. சிங்கள ஆயுதப் படையினரிற் சில பிரிவினரும், இனவாத சக்திகளும், சமாதான விரோதிகளும் போர் நிறுத்தத்தைக் குழப்பி, மோதலை ஏற்படுத்த பல தடவைகள் முயன்றனர். எத்தனையோ ஆத்திரமூட்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எமது மக்கள் பலர் அநியாயமாகக் கொல்லப்பட்டனர். ஆயினும், எமது இயக்கம், ஒழுக்கம் கட்டுப்பாட்டை இறுக்கமாகக் கடைப்பிடித்து, அமைதியை குலையவிடாது சமாதானத்தைப் பேணி வருகிறது. சமாதானப் பாதையில் எமக்குள்ள உண்மையான உறுதிப்பாட்டிற்கு இதுவொரு நல்ல எடுத்துக்காட்டு.

எமது மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்குச் சமாதான வழியில் தீர்வு காண்பது சாத்தியமாயின் அதனை முயன்று பார்ப்பதில் முழுமனதுடனும், நேர்மையுடனும் செயற்பட நாம் தயாராக இருக்கின்றோம். எமது மக்கள், தமது தாயக மண்ணில், தம்மைத் தாமே ஆட்சி புரியும் உரிமை உடையவர்களாக, சுதந்திரத்துடன் கௌரவமாக வாழவேண்டும் என்பதே எமது போராட்ட இலட்சியம். இந்த இலட்சியம் சமாதான வழியிற் கைகூடுமானால் அந்த வழியைத் தழுவ நாம் என்றுமே தயாராக இருக்கின்றோம்.

## ரணிலின் துணிவு, நோர்வே சாணக்கியம் பேச்சு முன்னேறிச் செல்லப் பேருதவி!

சமாதான வழிமுறை தழுவி, எமது மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்க நாம் என்றுமே தயங்கியதில்லை. திம்புவில், டில்லியில், கொழும்பில், யாழ்ப்பாணத்தில், இப்பொழுது தாய்லாந்திலாக நாம் பல தடவைகள், பல்வேறு வரலாற்றுச் சூழல்களிற் பேச்சுவார்த்தையிற் பங்குபற்றி வந்திருக்கின்றோம். முன்னைய பேச்சுக்கள் எல்லாமே தோல்வியிலேயே முடிந்தன. முன்னைய சிங்கள அரசுகளின் கடும் போக்கும் நேர்மையற்ற அரசியல் அணுகுமுறைகளுமே தோல்விக்கு காரணம். எனினும், திரு. ரணில் விக்கிரமசிங்காவின் இன்றைய அரசாங்கம் நேர்மையுடனும் துணிவுடனும் தமிழரின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முனைகிறது. உறுதியான அடித்தளத்திற் கட்டியெழுப்பப்பட்ட போர்நிறுத்தமும், அதனை மேலும் வலுப்படுத்தத் சர்வதேசக் கண்காணிப்புக் குழுவினரின் முயற்சிகளும் சமாதான அணுகுமுறைக்கு உரமேற்றி வருகின்றன. அத்தோடு, மிகவும் சாதுரியமாகவும், சாணக்கியமாகவும் நோர்வே அரசு கடைப்பிடிக்கும் அனுசரணை முறையானது இன்றைய பேச்சுக்கள் முன்னேறிச் செல்வதற்கு பேருதவியாக இருந்து வருகின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக, என்றுமில்லாதவாறு சர்வதேச அரசுகள் இச்சமாதான முயற்சியில் காட்டிவரும் ஆர்வமும், அக்கறையும், ஊக்குவிப்பும் இரு தரப்பினருக்கும் உற்சாகத்தையும் நம்பிக்கையையும் கொடுத்து வருகின்றன. ஒரு வலுவான சமாதான அடித்தளத்தில் நிலையூன்றி நின்றவாறு, படிப்படியாக, கட்டம் கட்டமாக, பரஸ்பர நம்பிக்கையை வளர்த்தபடி பேச்சுக்களை முன்நகர்த்திச் செல்வதே சாலச் சிறந்தது.

## அழிந்து கிடக்கும் தேசத்தைப் புனரமைக்க சர்வதேச உதவி நிம்மதி தருகிறது!

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக முடிவில்லாது தொடர்ந்த கொடிய போரின் விளைவாக எமது மக்கள் பாரிய வாழ்நிலைப் பிரச்சினைகளை எதிர்கொண்டு நிற்கின்றார்கள். தமிழர் தேசத்தின் சமூகப் பொருளாதாரக் கட்டமைப்புகள் சிதைந்து கிடக்கின்றன. தமிழரின் நகரங்களும், பட்டினங்களும், கிராமங்களும் தரைமட்டமாகக் கிடக்கின்றன. வீடுகள், கோவில்கள், பாடசாலைகள் அழிந்து கிடக்கின்றன. காலம் காலமாக இந்த மண்ணில் நிலைத்து நின்ற ஒரு பண்டைய நாகரீகம் வேரோடு சாய்க்கப்பட்டிருக்கிறது. இச் சிதைவுகள், அழிவுகள் மத்தியிலிருந்து எமது மக்கள் மீண்டும் தமது சமூகப் பொருளாதார வாழ்வை மீளக் கட்டி எழுப்புவது என்பது இலகுவான காரியமல்ல. இதுவொரு பிரமாண்டமான மனிதாபிமானப் பிரச்சினை. இப் பிரச்சினையைச் சர்வதேச சமூகம் அனுதாபத்துடன் அணுக வேண்டும். அழிந்து கிடக்கும் தமிழர் தேசத்தின் புனர்வாழ்வுக்கும் புனர்நிர்மாணத்திற்கும் உதவியளிக்க வெளிநாடுகள் பல முன்வந்துள்ளமை எமக்கு நிம்மதியைத் தருகிறது.

## உயர் பாதுகாப்பு வலயமென்ற போர்வையில் திறந்தவெளிச் சிறையாக யாழ்ப்பாணம்!

தமிழர் தாயகத்தில் அமைதி நிலை தோன்றியபோதும் இயல்பு நிலை தோன்றவில்லை. "உயர் பாதுகாப்பு வலையங்கள்" என்ற போர்வையில் எமது மக்களின் வாழ்விடங்களை, சமூக, பொருளாதார, பண்பாட்டு மையங்களை சிங்கள ஆயுதப் படைகள் ஆக்கிரமித்து நிற்கின்றன. சிறிய அளவிலான புவியியற் பரப்பும், குடிசன நெரிசலும் கொண்ட யாழ்ப்பாணக் குடாநாட்டை நாற்பதினாயிரம் படையினர் ஆக்கிரமித்து நிற்கின்றனர். எமது மக்கள் தமது இயல்பு வாழ்வை நடத்த முடியாதவாறு மூச்சுத்திணறும் ஆக்கிரமிப்பு. என்றுமே ஒரு பதட்ட நிலை. தமிழர் பண்பாட்டின் இதய பூமியான யாழ்ப்பாணம் ஒரு திறந்த வெளிச் சிறையாக மாற்றப்பட்டிருக்கின்றது. இங்கு எமது மக்களைச் சிங்கள இராணுவம் தனது பாதுகாப்புக் கேடயங்களாகவே பாவித்து வருகிறது. வீடுகளும், வீதிகளும், கிராமங்களும் இராணுவ ஆக்கிரமிப்பில் விழுங்கப்பட்டிருப்பதால் இடம்பெயர்ந்த பல்லாயிரம் மக்கள் தமது சொந்த இருப்பிடங்களுக்கு திரும்ப முடியாது அவதிப்படுகிறார்கள். இப்பிரச்சினைக்குத் தீர்வு காணாத வரை யாழ்ப்பாணத்தில் சமூக அமைதியும் இயல்பு நிலையும் தோன்றுவது சாத்தியமில்லை.

## அன்றாடப் பிரச்சினைத் தீர்வுக்கு அரசின் முன்னுரிமை ஆக்கபூர்வ அறிகுறி

போரை முடிவுக்கு கொண்டு வந்து, போரினாற் பாதிக்கப்பட்ட எமது மக்களின் அவசர, அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளை பேச்சுக்களின் ஆரம்ப கட்டத்தில் தீர்த்து வைக்க வேண்டும் என்பதே அன்றும் சரி இன்றும் சரி எமது நிலைப்பாடாக இருந்து வருகின்றது.



எமது நிலைப்பாட்டை முன்னைய அரசு நிராகரித்ததன் காரணமாகவே அன்றைய சமாதான முயற்சி தோல்வி கண்டது. ஏதோ நாம் தமிழரின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தொடுவதற்குப் பயந்து, அன்றாடப் பிரச்சினைகளை வலியுறுத்துவதாக முன்னாள் அரசு தவறாகக் கருதியது. ஆயினும் இன்றைய அரசாங்கம், பேச்சுக்களின் ஆரம்பக் கட்டத்தில் எமது மக்களின் அவசரமான வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்வந்து நடவடிக்கைகளை எடுத்து வருவது ஆக்கபூர்வமான அறிகுறியாகும்.

பேச்சுவார்த்தையின்போது, எமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் வரை, சகல விடயங்களையும் பேசுவதற்கு நாம் தயார். ஆயினும் பேச்சுக்கள் எவ்வித நிபந்தனைகளும் நிர்ப்பந்தங்களும் இன்றி, வரம்புகள் வரையறைகள் இன்றி, காலக் கட்டாயமின்றி, சுதந்திரமாக நடைபெறுவதையே நாம் விரும்புகின்றோம். ஒரு குறிப்பிட்ட கோட்பாட்டு எல்லைக்குள் பேச்சுக்கள் நிகழ்த்தப்பட வேண்டுமென வற்புறுத்துவதோ, அன்றி நிர்ப்பந்திப்பதோ எமது மக்களின் அடிப்படை அரசியற் சுதந்திரத்தையும், தேர்வையும் மீறுவதாக அமையும். தமது அரசியல் தகைமையையும், தமது சமூக, பொருளாதார, பண்பாட்டு வாழ்வையும் நிர்ணயிப்பது எமது மக்களின் அடிப்படையான அரசியல் உரிமையாகும். சுயநிர்ணய உரிமையின் சாராம்சமும் இதுதான்.

## சுயநிர்ணய உரிமைக்கான போராட்ட இலட்சியமே எமது உறுதி!

ஐ.நா. சாசனத்திலும், பிரகடனங்களிலும் குறிப்பிடப்படும் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை மையப் பொருளாகக் கொண்டே எமது போராட்ட இலட்சியம் நெறிப்படுத்தப்பட்டிருக்கிறது. அன்றும் சரி, இன்றும் சரி, சுயநிர்ணய உரிமைக்கான எமது போராட்ட இலட்சியத்தில் நாம் உறுதி பூண்டு நிற்கின்றோம். தமிழர் தாயகம், தமிழர் தேசியம், தமிழரின் சுயநிர்ணய உரிமை ஆகியனவையே எமது அரசியல் இலட்சியத்தின் அடிப்படைகள். திம்புவிலிருந்து தாய்லாந்து வரை இந்த அடிப்படைகளையே நாம் வலியுறுத்தி வருகின்றோம். இம் மூல கோட்பாடுகளின் அடிப்படையிலேயே தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பது எமது நிலைப்பாடு.

தனித்துவமான ஒரு மொழி, பண்பாடு, வரலாறு, நன்கு வரையறுக்கப்பட்ட ஒரு தாயக நிலம், இன அடையாள உணர்வு போன்ற பண்புகளை உடையவர்கள் என்பதால், எமது மக்கள் ஒரு தேசிய இனமாக, ஒரு மக்கள் சமூகமாக அமைந்துள்ளனர். ஒரு தனித்துவமான மக்கள் சமூகம் என்ற ரீதியில் எமது மக்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்தானவர்கள். சுயநிர்ணய உரிமை என்பது உள்ளான, புறமான இரு அம்சங்களைக் கொண்டது. உள்ளான சுயநிர்ணயம் என்பது ஒரு மக்கள் சமூகத்தின் பிரதேச சுயாட்சி உரிமையை வலியுறுத்துகின்றது.

தமிழ் மக்கள், தமது சொந்த மண்ணில், வரலாற்று ரீதியாக வாழ்ந்து வந்த பாரம்பரிய மண்ணில், அந்நிய சக்திகளின் ஆதிக்கம், தலையீடு இன்றி, சுதந்திரமாக, கௌரவமாக வாழ விரும்புகின்றார்கள். தமது மொழியை வளர்த்து, தமது பண்பாட்டைப் பேணி, தமது பொருளாதாரத்தை மேம்படுத்தி, தமது இன

(10ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு, கிழக்கை மீளப் புனரமைக்க ஐரோப்பிய யூனியன் முழு ஆதரவு !

(ஒஸ்லோ)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான சமாதானத்தீர்வு காணும் முயற்சிகளுக்கு ஐரோப்பிய யூனியன் முழுமையான ஆதரவினை வழங்கும் என்று ஐரோப்பிய யூனியனின் சார்பில் ஒஸ்லோ மாநாட்டில் கலந்கொண்ட டென்மார்க் நாட்டைச் சேர்ந்த பீற்றர் ஹன்சன் தெரிவித்துள்ளார்.

இருபது வருட காலமாக நீடித்த இனமோதல்களுக்குத் தீர்வு காண இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருவது வரவேற்கத்தக்கது. இப்பேச்சுக்களில் இரு தரப்பினருமே அழுத்தமான உறுதியான அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வருகின்றனர்.

இரு தரப்பினருமே தமது நிலைகளில் இருந்து இறங்கி நின்றே பேச்சுக்களை நடத்துகின்றனர். பேச்சுக்களின் மூலம் தீர்வு காணும் சந்தர்ப்பங்களை ஒருபோதும் தவறவிடக்கூடாது.

இலங்கைக்கு நிதியுதவிகளை வழங்குவது தொடர்பான உபகுழுவை அமைக்கவும் ஐரோப்பிய யூனியன் சிபார்சு செய்துள்ளது. மேலதிக தகவல்கள், நிதியுதவிகள் தொடர்பாக நெருங்கிச் செயற்படவும் ஐரோப்பிய யூனியன் தயாராக உள்ளது எனவும் ஐரோப்பிய யூனியனின் பிரதிநிதி பீற்றர் ஹன்சன் மேலும் தெரிவித்துள்ளார்.

இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்தபோது

# யாழில் வீரச்சாவெய்தியோருக்கு வடமராட்சி கிழக்கில் அஞ்சலி !

யாழ். குடாநாடு இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்த வேளை - குடாநாட்டில் வீரச்சாவடைந்த மாவீரர்கள் 18 பேருக்கான அஞ்சலி நிகழ்வு வடமராட்சி கிழக்கிலுள்ள குடாரப்பு மாவீரர் துயிலும் இல்லத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் கடற்புலிகளின் தளபதி லெப். கேணல் மங்களேஸ் தேசியக் கொடி ஏற்றினார். வடமராட்சி கிழக்கு தமிழீழ கல்விக்கழக பொறுப்பாளர் தாயகன் பொதுச் சுடரினை ஏற்றிவைத்தார்.

வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தீபன் மலர் அஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து போராளிகளும் மாவீரர்களும் அஞ்சலி செலுத்தினர்.(ச)

# அரச ஊழியர் நட்ட ஈடு 5லட்சம் ரூபாவாக அதிகரிப்பு

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கு அரசு வழங்கக்கூடிய நஷ்ட ஈட்டிற்கான அதிகூடிய தொகை இதுவரை காலமும் 2.5 இலட்சம் ரூபாவாக இருந்தது. தற்பொழுது அரசாங்கம் நஷ்ட ஈட்டிற்கான தொகையினை 5 இலட்சம் ரூபாவாக அதிகரித்துள்ளதாகவும், அதற்கான அமைச்சரவை அங்கீகாரம் தமக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் தொழிற்துறை அமைச்சர் மகிந்த சமரசிங்க அறிவித்துள்ளார். (01)

# பஸ்போக்குவரத்தில் வெளிநாட்டு நிறுவனம் தனியார் பஸ் உரிமையாளர்கள் எதிர்ப்பு!

## வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாகவும் எச்சரிக்கை

(கொழும்பு)

தனியார் பஸ் உரிமையாளர்கள் அடுத்த மாதம் - டிசெம்பர் 16 ஆம் திகதி முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளனர்.

அரசாங்கத்திற்கும் சர்வதேச நிறுவனமான "சர்வதேச பஸ் சேவைகள்" (ஐ.பி.எஸ்) நிறுவனத்திற்கும் இடையில் 7 மில்லியன் ரூபாவிற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதையடுத்து இனி வரும் காலங்களில் இலங் கையில் ஐ.பி.எஸ் நிறுவனம் பஸ் போக்குவரத்தில் ஈடுபடவுள்ளது.

இதனால் தனியார் பஸ் உரிமையாளர்கள் பெரும் பாதிப்பிற்குள்ளாகுவர் என்ற அச்சத்தின் காரணமாக டிசெம்பர் 15ஆம் திகதிக்கு முன ஐ.பி.எஸ் நிறுவனத்துடனான ஒப்பந்தத்தினை அரசாங்கம் இரத்துச் செய்ய வேண்டும் எனக் கோரியே வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் அறிவித்துள்ளனர். (01)

# கல்முனை வாடிவீடு, நீலாவணை முகாம்களை அகற்ற வேண்டாம்!

## — முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி. கோரிக்கை —

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்முனை வாடிவீடு, நீலாவணைப் படைமுகாம்களை அகற்ற வேண்டாம் எனக்கோரி முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினரான எச்.எம்.எம் ஹாரீஸ் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவுக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக்கரைப்பற்றில் அண்மையில் இடம் பெற்ற பாதுகாப்பு உபகுழுக் கூட்டத்தில்- கல்முனை வாடிவீடு, மற்றும் நீலாவணை படைமுகாம்களை அகற்றுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பள்ளிவாசல் நம்பிக்கைச்சபையினரும், உலமாக்கலும் தமது கவனத்திற்குக் கொண்டு வந்திருப்பதாக ஹாரீஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த முகாம்கள் அகற்றப்படுவதால், தமது பாதுகாப்புக்கு அசசுறுத்தல் ஏற்படும் என முஸ்லிம்கள் அஞ்சுகின்றனர். எனவே மக்களின் பயத்தைப் போக்குவதற்கு - இந்த முகாம்களை அகற்றும் நடவடிக்கையை கைவிடுமாறு முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ஹாரீஸ் மேலும் அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.



கொழும்பு லிப்டன் சதுக்கத்தில் நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சியினர் நடத்திய, அரசின் சமாதான முயற்சிகளுக்கு எதிரான ஊர்வலத்தில் புத்த பிக்குகள் நோர்வே நாட்டுத் தேசியக் கொடியை தீவைத்து எரிக்கும் காட்சி.

# பொலிஸாருக்கான தொப்பிகள் கொள்வனவிலும் மோசடி

## நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

பொலிஸ் திணைக்களத்தில் பொலிஸாருக்கான தொப்பிகள் கொள்வனவில் மோசடிகள் இடம் பெற்றுள்ளதாக ஹஸா இன்ரநஷனல் நிறுவனம் அறிவித்துள்ளது.

பொலிஸார் அணிவதற்கென 75 ஆயிரம் தொப்பிகள் கொள்வனவிற்கான பொலிஸ் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட கேள்வி பத்திரத்தின்படி வழங்குநரை தெரிவு செய்வதில் மோசடி நிகழ்ந்திருப்பதாக ஹஸா இன்ரநஷனல் நிறுவனம் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளது.

தற்பொழுது நெக்சுன் இன்ரநஷனல் என்ற நிறுவனம் வழங்கியுள்ள தொப்பிகளின் உற்பத்தித் தரம், மிகவும் தரங்குறைந்தது எனவும் ஹஸா இன்ரநஷனல் கூறியுள்ளது.

இவ்வழக்கினை எதிர்வரும் இரணடாந்திகதி விசாரணைக்கு எடுப்பதாக உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

(01)

## கைப்பை கண்டெடுப்பு

திருமதி யோகம்மா கோபாலன், 325, அகதிமுகாம், நாவற்குழி என்பவரின் கைப்பை, வங்கி ஆவணங்களுடன் கண்டெடுக்கப்பட்டு நமது ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தனது ஆதாரங்களை நிரூபித்து கைபபையை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்.

## பரீட்சை மண்டப இடமாற்றம்

(சாவகச்சேரி)

பரீட்சார்த்திகளின் நன்மை கருதி- க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்கு ஒழுங்கு செய்யப்பட்ட மண்டபங்களில் மாற்றங்கள் சில செய்யப்பட்டுள்ளன.

சாவகச்சேரி மண்டப இலக்கம் 2,சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கும்,

பளை மத்திய கல்லூரி மண்டப இல.2, கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்திற்கும்,

வேம்போடுகேணி சி.சி. தமிழ் கலவன பாடசாலை பரீட்சை மண்டபம், கொடிகாமம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கும் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென வலயக் கல்விப் பணிப்பாளர் வீ.செல்வராஜா அறிவித்துள்ளார். (29)

# பயங்கரவாத தடைச்சட்டம் சிங்களவருக்கும் தீங்கானது

## நாடாளுமன்றத்தில் சம்பந்தன்

(கொழும்பு)

பயங்கரவாத தடைச்சட்டம் தமிழர்களுக்கு மட்டுமல்ல சிங்களவர்களுக்கும் தீங்கானது என சம்பந்தன் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டம் தமிழ் சமூகத்திற்கு மட்டுமல்ல இலங்கையின் ஏனைய சமூகங்களுக்கும் பாரிய நெருக்கடிகளை உருவாக்கி வருகின்றது. இச்சட்டத்தின் அடிப்படையிலேயே விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு மத்திய வங்கி குண்டு வெடிப்பு தொடர்பான வழக்கில் 200 வருட சிறைத்தண்டனையை நீதிமன்றத்தால் தீர்க்க முடிந்தது.

ஆனால், நாட்டின் வழமையான சட்டங்களின் அடிப்படையிலே பிரபாகரனை குற்றவாளியாக இனங்காண முடியாது.

எனவே, தற்பொழுது நாட்டின் சமாதான சூழ்நிலையை தொடர்ந்தும் பேண பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை உடனடியாக நீக்க வேண்டும் என நாடாளுமன்றத்தில் நீதியமைச்சிற்கான நிதி ஒதுக்கீட்டின்போது நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் மேலும் தெரிவித்தார். (01)

எகிப்தில் - சுயஸ் கால்வாயில்

# இத்தாலி செல்ல முயன்ற மேலும் 166 இலங்கையர் கைது

(கெய்ரோ)

சட்டவிரோதமாக இத்தாலி நோக்கிச் சென்ற 166 இலங்கையர்களை எகிப்துப் பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

அண்மையில் சுயஸ் கால்வாய்ப் பகுதியில் 159 இலங்கையர் கைது செய்யப்பட்ட பின்னர், நடத்தப்பட்ட தேடுதலில் மேலும் 166 இலங்கையரை கெய்ரோப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஒரு படகில் 101 பேரும் அடுத்த படகில் 65 பேருமாக, இரு படகுகளிலும் 166 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இரு படகுகளையும் கெய்ரோப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். முன்னர் கைது செய்யப்பட்ட 159 பேரையும் நேற்று விமானமூலம் இலங்கைக்கு அனுப்பிவைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

# அடுத்த ஐந்து வருடங்களுக்குள் 2 மில்லியன் மக்களுக்கு வீட்டுவசதி

(கொழும்பு)

அடுத்த ஐந்து வருட காலத்துக்குக்குள் 2 மில்லியன் மக்களுக்கு வீட்டு வசதி வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் மகிந்த விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மாத்தறை மாவட்டத்தில் அமைக்கப்பட்ட வீடமைப்புத் திட்டத்தை பொது மககளிடம் கையளித்த வைபவத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவிததார்.

அடுத்த வருடத்தில் வீடமைப்புக் கடன் வழங்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் 10,000 வீடுகள் அமைக்கப்படும் ஒவ்வொரு தேர்தற் தொகுதிக்கும் 500 வீடுகள் வீதம் அமைத்துக் கொடுக்கப்படும் என்றார்.

# லொறி மோதியதில் சைக்கிளில் சென்ற கிராம அலுவலர் மரணம்!

## - சாவகச்சேரியில் சம்பவம் -

(சங்கத்தானை)

வீதியால் சைக்கிளில் சென்று கொண்டிருந்த கிராம அலுவலரை- கொழும்பிலிருந்து பொருட்களுடன் வந்த லொறி மோதியதில் கிராம அலுவலர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். நேற்றுக் காலை 10 மணியளவில் சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கத்துக்கு முன்பாக இடம்பெற்ற இவ்விபத்தில் உசன் மிருசுவிலைச் சேர்ந்தவரும், கெற்பெலிப் பகுதிக் கிராம அலுவலருமான என். சிவகுரு (வயது 45) என்பவரே கொல்லப்படடவராவர்.

இடப்பெயர்வின் பின் வலிகாமம் பகுதியில் வசித்து வந்த இவர், மிருசுவிலில் உள்ள தனது வீட்டிற்கு சென்று விட்டுத் திரும்பும்போதே இச்சம்பவம் இடம்பெற்றது. சம்பவத்துடன் தொடர்புபட்ட லொறி, விபதது இடம்பெற்ற இடத்தில் தரிக்காது பல கிலோமீற்றர் சென்ற பின்னர், இளைஞர்களால் மறிக்கப்பட்டு சம்பவ இடத்திற்கு கொண்டு வரப்பட்டது. இதன்போது ஆத்திரம் கொண்ட பொதுமக்கள் லொறியின் கண்ணாடிகளை அடித்து நொருக்கினர். (30),(29)

## றமழான் தொழுகை நேரங்கள்

| | |
|---|---|
| ஸஹர் முடிவு | 5.00 |
| சுபஹ் | 5.15 |
| உதயம் | 6.36 |
| லுஹர் | 12.30 |
| அஸர் | 3.52 |
| ம:ரிப் | 6.22 |
| இஷா | 7.36 |

# வெளிநாடுகளுக்கான தூதுவர், அதிகாரிகள் நேற்று யாழ்ப்பாண நிலைமையை ஆராய்ந்தனர்

(யாழ்ப்பாணம்)

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதுவராலயங்களில் பணிபுரிவதற்காக புதிதாக நியமனம் பெற்றவர்களும், ஏற்கனவே பணியில் இருப்பவர்களுமாக இருபத்தியிரண்டு தூதரக அதிகாரிகள் நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தனர்.

புதிதாக புனரமைக்கப்பட்டு வரும் பொதுசன நூலகத்திற்கு நேற்று மதியம் ஒரு மணிக்கு விஜயம் செய்த மேற்படி குழுவினர், யாழ்ப்பாண மாநகர முதல்வர் செல்லன் கந்தையனையும் மற்றும் மாநகர சபை உறுப்பினர்களையும் சந்தித்துக் கலந்துரையாடல் ஒன்றை நடாத்தியுள்ளனர்.

இக்கலந்துரையாடலில் யாழ். மாநகர முதல்வர் உரையாற்றுகையில், இப்போது நாம் இருக்கின்ற இந்த பொதுசன நூலகம் தற்போது ஆட்சியிலிருக்கும் கட்சியினராலேயே எரிக்கப்பட்டது. இப்போது இக் கட்சியினராலேயே இக்கட்டடம் புனரமைக்கப்பட்டு வருகின்றது. ஆனாலும் இக்கட்டடப் பணிக்கு ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாக எம்மை வந்து சேரவில்லை.

யாழ்ப்பாணம் தற்போது யுத்தம் காரணமாக சிதைவடைந்தும், அழிக்கப்பட்டும் காட்சிதருகிறது. 1980ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் செழிப்புடனும் அழகுடனும் இருந்தது. எனவே இப்போதிருக்கும் யாழ்ப்பாணத்தை முன்பிருந்தது போல் புனரமைக்க நீங்கள் உதவி செய்ய வேண்டும்.

அத்துடன் ஏ-9 கண்டிவீதி 24 மணித்தியாலமும் மக்கள் பாவனைக்காகத் திறக்கப்பட வேண்டும். இப்படி வீதி 24 மணித்தியாலம் திறந்தால்தான் மக்கள் தமது முழுமையான இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பமுடியும்.

யாழ்ப்பாணத்தில் முன்பு மூன்று விடுதிகள் இருந்தன. ஆனால் இவ்விடுதிகள் இப்போது இராணுவத்தின் பாவனையில் இருக்கின்றன. இதனால் வெளிநாடுகளிலிருந்து வரும் மக்கள் தங்குவதற்கு இடம் இல்லை. எனவே இராணுவத்தினர் இவ்விடுதிகளிலிருந்து வெளியேற வேண்டும் எனத் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலின்போது, வெளிநாட்டில் இலங்கைத் தூதுவராக பணிபுரிய புதிதாக நியமனம் பெற்ற தமிழரான தூதுவர் ஒருவர் இக்குழுவினர் சார்பில் உரையாற்றினார். இவர் தனதுரையில், இலங்கையில் எல்லா மக்களும் விரும்புவது சமாதானத்தையே. சமாதானம் என்பது எல்லா சமூகத்தில் வாழ்பவர்களும் சமமாக வாழ வேண்டும் என்பதே. இதற்காகவே அரசாங்கமும் புலிகளும் முயற்சிக்கிறனர். இக்கூட்டு முயற்சியினால் எமது மண்ணில் குறிப்பாக, தமிழ் பேசும் மண்ணில் யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களில் சமாதானம் நிச்சயம் நிலைக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்த யாழ்ப்பாண விஜயத்தின் போது- இத்தாலி, மியான்மார், கியூபா, குவைத், ரஷ்யா, ஈரான், யேமன் ஆகிய நாடுகளுக்கு புதிதாக நியமனம் பெற்ற தூதுவர்களும் இடம்பெற்றிருந்தனர். இவர்களுடன் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா, பிரதிக் கட்டளைத் தளபதி இரத்தினசபாபதி ஆகியோரும் வெளிவிவகார அமைச்சின் செயலாளரும் நேற்றைய தினம் யாழ்ப்பாண பொதுசன நூலகத்துக்கு வருகை தந்தனர்.

இவர்கள் யாழ்ப்பாண நிலையைப் பார்வையிடும் நோக்கமாகவே வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.







நேற்று யாழ்.பொதுசன நூலகத்திற்கு விஜயம் செய்த வெளிநாடுகளுக்கான தூதுவர்களையும் அதிகாரிகளையும் முதலிரு படங்களிலும் அவர்களுடன் கூடவந்த யாழ்.இராணுவ அதிகாரிகளை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# கல்வியியல் முதுதத்துவமாணிக்கு தெரிவுசெய்யப்பட்டவர்கள் விபரம்!

(கந்தர்மடம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப்படிப்புகள் பீடத்தினால் அடுதத ஆண்டுக்கான கல்வியியல் முதுதத்துவமாணி கற்கை நெறிக்குத் தெரிவான 54 பேரின் பெயர் விபரம் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது.

ஏ.ஆரோக்கியநாதன், எம். ஆனந்தராஜா, எஸ்.கே.பிகுராடோ, ரீ.பங்கயச்செல்வன், எஸ்.தியாகலிங்கம், எஸ்.பத்மசீலன், எஸ். சண்முகநாயகம், திருமதி விஜயச்சந்திரன் அன்ரனீஸ், திருமதி ரீ.தயானந்தன், திருமதி எஸ். நாகேஸ்வரன், திருமதி எம்.விக்ரர்லம்பேர்ட், கே.முருகவேள், பீ. சற்குணநாதன், கே.சின்னராஜா , கே.சிறிஸ்கந்தவேள், எம்.கிறிஸ்ரியன், என்.ஞானவேல், எஸ்.விஜயேந்திர சர்மா, விஜயரட்ணம், எஸ்.சிறிதரன், ஜே.சந்திரபிரகாசம், என்.தெய்வேந்திரராஜா, திருமதி இதயசிவதாஸ், ரி.அல்பேட், கே.சசிதரன், என்.சிவனேசர், ஆர்.ராஜமகேந்திரன், எஸ்.திருநாவுக்கரசு, ரீ.தனேஸ்வரன், வீ.ஞானகாந்தன், திருமதி எம்.விவேகானந்தன், ஐ. குரூஸ், திருமதி எஸ்.ஜோர்ஜ், திருமதி எஸ்.நாகராசா, கே.கிருஷ்ணயோகன், கே. குலசேகரம், கே.திலகரட்ணம், ஆர். சக்தியேந்திரம்பிள்ளை, ஜீ.சிவசுந்தரம், செல்வி.எஸ்.சிவராஜா, கே.செல்வநாயகம், செல்வி. எம். சின்னையா, ஜீ.இரத்தினசிங்கம், கே.அருந்தவராஜா, கே.கனகராஜா, எம்.கௌரிகாந்தன். எஸ்.தேவசகாயம், திருமதி பி.சுப்பிரமணியம், திருமதி எஸ்.சிவநாதன், செல்வி பீ.சிவச்சந்திரா, கே.சத்தியசீலன், எம்.இக்னேசியஸ், எஸ்.பாஸ்கரன், எஸ்.தேவமனோகரன், ஆகியோரே தெரிவு செய்யப்பட்டவர்களாவர்.

# வன்னிப்பகுதி வைத்தியசாலைகள் விரைவில் புனரமைக்க நடவடிக்கை

## மாகாண சுகாதார அமைச்சுக் கூட்டத்தில் முடிவு

(யாழ்ப்பாணம்)

வடக்கு- கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பிரிவுக் குழுக்கூட்டம் இம்முறை யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

வடக்கு- கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இரத்நாயக்கா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் - மாகாணப் பணிப்பாளர், பிரதி மாகாணப் பணிப்பாளர்கள், கணக்காளர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், பிரதித்திட்டமிடல் பணிப்பாளர், கட்டடப் பொறியியலாளர்கள் என 60இற்கும் மேற்பட்டோரும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இதில் கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற மிகவும் பாதிக்கப்பட்டுள்ள வைத்தியசாலைகளுக்கு முன்னுரிமை கொடுத்து, வைத்தியசாலைகளை மீள இயக்க நடவடிக்கை எடுப்பது பற்றியும், தேவைக்கு அதிகமாக உள்ள வைத்தியசாலைகளில் உள்ள வைத்தியர்களை, ஏனைய வைத்தியசாலைகளுக்கும் தேவைக்கு ஏற்றவாறு பகிர்ந்து நியமிப்பது பற்றியும் ஆலோசனை வழங்கப்பட்டது.

தீவுப் பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்ற வைத்திய அதிகாரிகள் பின்னடிப்பதோடு தீவகப்பகுதி மக்களின் அவல நிலை பற்றியும் எடுத்துக் கூறப்பட்டது. இதற்கு ஏற்ற நடவடிக்கை எடுப்பதாகவும் சுகாதார அமைச்சின் செயலாளரால் உறுதியளிக்கப்பட்டது.

## மரவள்ளிக்கிழங்கை உட்கொண்ட

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் வைத்தியசாலையில்

மரவள்ளிக்கிழக்கு உட்கொண்டமையால் மயக்கமடைந்த நிலையில். குடத்தனை மனற்காட்டை சேர்ந்த ஒரே குடும்பத்தினை சேர்ந்த ஐவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்

மகேஸ்வரன் விஜயா (வயது 17) ம.சுரேக்கா(வயது 10) ம.வினேஸ் (வயது 8) ம. சுரேன்(வயது 05) ம. ரஞ்சித்(02) ஆகியோரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய பரிசளிப்பு விழாவுக்கு வருகை தரும் பிரதம விருந்தினரை வரவேற்கும் அதிபர்,ஆசிரியர் மாணவர்கள். (60)

## நேரக் காப்பாளர் இல்லாத அச்சுவேலி பஸ் நிலையம்

அச்சுவேலி பேருந்து நிலையத்தில் நேரக்காப்பாளர் இன்மையால் பிரயாணிகள் மிகவும் சிரமத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

குறிப்பாக சுன்னாகம், மானிப்பாய் போன்ற இடங்களுக்ச் செல்பவர்கள் இதனால் விபரங்களை பெறமுடியாதிருப்பதாக விசனம் தெரிவித்துள்ளனர். பருத்தித்துறைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் கேந்திரநிலையமாக அச்சுவேலி விளங்குவதால் ஒரு நேரக் காப்பாளரை அல்லது பஸ்களின் நேரசூசியை பார்வைக்கு வைக்க ஆவன செய்யும்படி மக்கள் கேட்டுள்ளனர். (76)

## வலி தென்மேற்கு சனசமூக நிலையங்களுக்கு

வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் - இதுவரை 1600 ரூபாவுக்கான சனசமூகநிலைய நன்கொடை பெறுவதற்கான உறுதிச் சீட்டில் கையொப்பம் இடாதவர்களை , டிசம்பர் 3 ஆம் திகதிக்கு முன்பாக சனசமூக நிலையத்தலைவர் அல்லது செயலாளர் சமூகமளித்து கையொபபமிடுமாறு உள்ளூராட்சி உதவியாளர் கேட்டுள்ளார்.

# கைப்பற்றப்பட்ட 140 குண்டுகள் நீதிவான் முன்னிலையில் அழிப்பு

(சுன்னாகம்)

இராணுவத்தினரால் பாதுகாப்புப் பிரதேசங்களாக பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிகளில் இருந்து மீட்கப்பட்ட 140 கைக்குண்டுகள் - மல்லாகம் நீதவான் முன்னிலையில் கடந்த சனிக்கிழமை கீரிமலையில் வைத்து அழிக்கப்பட்டன.

இதன்போது இராணுவ அதிகாரிகள் பிரேம்குமார, எல்.பி.ஆர். புஸ்பகுமார போன்றோரும் பொலீசாரும் சமூகம் கொடுத்திருந்தனர்.(87)

# திருமலை படை முகாம்களால் உல்லாசத் துறைபாதிப்பு

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் உள்ள இராணுவ முகாம்கள் காரணமாகவும், படையினரின் கெடுபிடி காரணமாகவும், அங்கு உல்லாசப் பிரயாணத்தொழிற்துறை மிகவும் பாதிக்கப்பட்டு வருகிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கையைத் தொடர்ந்து பல உல்லாசப் பயணிகளுக்கான விடுதிகள் திருமலையில் ஆரம்பிக்கப்பட்டன. எனினும் இங்கு படைமுகாம்கள் எவையும் அகற்றப்படாமல் உள்ளமையாலும், படையினரின் ரோந்து நடவடிக்கை காரணமாகவும், உல்லாசப் பயணிகள் அங்கு செல்ல அஞ்சுகின்றனர்.

# சமாதான முயற்சிகள் நல்ல விளைவைத் தருகின்றன!

(பாங்கொக்)

இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகள் நல்ல விளைவுகளை தரத்தொடங்கியுள்ளதாக தாய்லாந்து பிரதமர் தக்ஸின் சிவைற்றா தெரிவித்துள்ளார்.

ஆசிய நாடுகளின் அரசியல் கட்சிகள் கலந்து கொண்ட மாநாட்டில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில் பேச்சுக்களை நடத்துவதற்கு தாய்லாந்து சகல இடவசதிகளையும் மற்றும் ஒத்துழைப்புக்களையும் வழங்கும் என்றும் தாய்லாந்து பிரதமர் அறிவித்துள்ளார்.


# யாழ். குடாநாட்டில் கடற்தொழில் நடவடிக்கைகள்

பகுதி II

தமிழின்பன்

யாழ்.குடாநாட்டின் கடற்றொழில் நடவடிக்கைகள் பற்றிய ஓர் பார்வையைச் சென்ற அத்தியாயத்தில் பார்த்திருந்தோம். அதில் குடாநாடானது 15 கடற்தொழில் பரிசோதகர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது கண்டோம்.

இன்றைய அத்தியாயத்தில் நெடுந்தீவுப் பிரதேசத்தின் கடற்தொழில் நடவடிக்கைகள் பற்றிப் பார்ப்போம்.



நெடுந்தீவானது குடாநாட்டிலிருந்து தனியான ஓர் தீவாக விளங்குகின்றது. இத்தீவானது அண்ணளவாக 12km நீளமும் 8km அகலமும் கொண்ட ஒரு பெரிய தீவாகும். இத்தீவில் கணிசமான அளவு கடற்தொழிலில் ஈடுபடுபவர்கள் காணப்படுகின்றனர். தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவு நெடுநதீவிற்கென உள்ளது. அத்துடன் ஆறு கிராம சேவையாளர் பிரிவுகளும் காணப்படுகின்றன. கடற்தொழில் நடவடிக்கைகளை மையமாகக் கொண்டு நான்கு வலயங்களாக நெடுந்தீவு பிரிக்கப்பட்டுள்ளது.

அவையாவன:-

நெடுந்தீவு மேற்கு
நெடுந்தீவு கிழக்கு
நெடுந்தீவு மத்தி
வெல்லை

மேற்சொல்லப்பட்ட நான்கு பகுதிகளிலும கடற்தொழில் நடவடிக்கைகள் காணப்பட்டாலும் நெடுந்தீவு மத்தி, கிழக்கு போன்ற பகுதிகளிலேயே கணிசமான கடற்தொழிலாளர்கள் வாழ்கின்றனர்.

மேலும், மேலே குறிப்பிட்ட கடற்தொழல் வலயங்கள் கடற்தொழில் நடவடிக்கையை கருத்திற்கொண்டு கடற்தொழில் திணைக்களத்தினால் பிரிக்கப்பட்டதே அன்றி கிராம சேவகர் பிரிவு அல்ல என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

1983 காலப்பகுதியில் கருவாட்டு உற்பத்திக்குப் பேர்போன இடமாக நெடுந்தீவு விளங்கியமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். குறிப்பாக "கட்டா" எனச் சொல்லப்படும் பாரை இனம் நெடுந்தீவிற்கே உரித்தானது என்று சொன்னால் மிகையாகாது. அந்தளவிற்கு நெடுந்தீவுக்குச் செல்வம் ஈட்டிக் கொடுத்ததில் "கட்டா"வுக்குப் பெரும் பங்குள்ளது எனலாம். அக்காலப்பகுதியில் 17 1/2 அடி பிளாஸ்ரிப் படகு (இயந்திரமயமாக்கப்பட்டது) வைத்துத் தொழில் புரிந்தோர் ஏராளம். அதுமட்டுமல்ல, குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்தும் கடற்தொழிலாளர்கள் (உதாரணமாக மயிலிட்டி, மாதகல் போன்ற பகுதிகள்) பருவகாலத்தில் நெடுந்தீவில் வந்து

**அன்றும்**

வாடி அமைத்து தொழில் புரிந்து செல்வம் ஈட்டியது ஒரு வரலாறு.

1983 இற்குப் பிந்திய காலங்களில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகள் நெடுந்தீவுப்பகுதியையும் விட்டு வைக்கவில்லை. குறிப்பாக பெருமளவு கடற்தொழிலாளர்கள் தாம் வைத்திருந்த இயந்திரமயமாக்கப்பட்ட வள்ளங்களைப் பயன்படுத்தி இந்தியாவுக்கு அகதிகளாகச் செல்லத் தொடங்க, நெடுந்தீவின் கடற்தொழில் நடவடிக்கைகள் மெல்ல மெல்ல வீழ்ச்சியடைத் தொடங்கின. குறிப்பாக 1985 இல் குமுதினி என்ற பயணிகள் படகு இடைமறிக்கப்பட்டு பல பேர் வெட்டிக் கொல்லப்பட்ட பின்னர், கடலிலே தொழில் செய்யும் கடற்தொழிலாளர்களின் எண்ணிக்கை மேலும் வீழ்ச்சியடைத் தொடங்கியது.

இப்பிரதேசத்தில் வாழும் கடற்தொழிலாளர்களின் எண்ணிக்கையை அவதானிக்கும்போது வெல்லைப் பகுதியானது பெரிய வெட்டை வெளிப்பிரதேசமாகக் காணப்படுகின்றது. இங்கு கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுவதற்கான பிரதான காரணமாக விளங்குவது போக்குவரத்துப் பிரச்சினையாகும்.

நெடுந்தீவில் ஐப்பசி தொடக்கம் மாசி மாதம் வரை பெருமளவு மீன்கள் பிடிபடும் காலம் ஆகும். பொதுவாக பாரை, கும்பளா, திருக்கை, சூடை போன்றன பெருமளவு பிடிக்கப்படுகின்றன. பொதுவாக ஐப்பசி தொடக்கம் தை மாதக் காலப்பகுதியில் மாதம் 25 ஆயிரம் கிலோவுக்கு மேற்பட்ட அளவில் மீன் பிடிக்கப்படுகின்றது. மாதம் 7 ஆயிரம் கிலோவுக்கு மேற்பட்டளவில் கருவாடு போடப்படுகின்றது.

| கடற்தொழில் வலயங்கள் | மீனவக் குடும்பங்கள் | கடற்தொழிலில் ஈடுபடுபவர்கள் |
|---|---|---|
| நெடுந்தீவு மேற்கு | 138 | 155 |
| நெடுந்தீவு கிழக்கு | 64 | 68 |
| நெடுந்தீவு மத்தி | 88 | 100 |
| வெல்லை | 10 | 12 |

பொதுவாகத் தற்போது இங்கு கடற்தொழில் நடவடிக்கைகளுக்கு கட்டுமரம் பயன்படுத்தப்படுவதில்லை. றெஜிபோமினால் செய்யப்பட்ட (பாச்) என்ற கலமே பயன்படுத்தப்படுகின்றது. இது கடற்தொழில் பொறியியலாளர்களால் இதுவரை அங்கீகரிக்கப்படவில்லை.

இயந்திரமயமாக்கப்பட்ட 16 வள்ளங்கள் (F.G.B) மொத்தமாகத் தற்போது தொழிலில் ஈடுபடுத்தப்படுகின்றன. நெடுந்தீவுக்கடலில்

**இன்றும்**

மரத்தாலான வள்ளம் பயன்படுத்தப்படுவதில்லை. றெஜிபோமினால் செய்யப்பட்ட (பாச்) மொத்தமாகத் தற்போது 116 காணப்படுகின்றன.

நெடுந்தீவு மீனவர்களின் நலன்களைக் கவனிப்பதற்கென நெடுந்தீவு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று காணப்படுகின்றது. இச்சங்கத்தில் 250 அங்கத்தவர்கள் உள்ளனர். 1999ஆம் ஆண்டு யூ.என்.எச்.சி.ஆர். நிறுவனம் வழங்கிய ரூ.5லட்சத்தை, கூட்டுறவுச் சங்கம் சுழற்சிமுறைக் கடன் அடிப்படையில் கடற்தொழிலாளர்களுக்கு வழங்கி அவர்களின் தொழிற்திறனைக் கூட்டியுள்ளது. அத்துடன் வலை, மீன்பிடி உபகரணங்கள் விற்பனை நிலையம் ஒன்றையும் சங்கம் நடாத்தி வருகின்றது.

தற்போது இப்பிரதேச கடற்தொழிலாளர்களின் பிரதான பிரச்சினையாக இருப்பது போக்குவரத்து ஆகும். ஏனெனில் குறிப்பிட்ட காலத்தில் தொகையாகக் கிடைக்கும் மீன்களை, போக்குவரத்து வசதியின்மையால் உடனடியாக சந்தைப்படுத்த முடியாமையினால் மீனவர்கள் கணிசமான வருமானத்தை இழக்க நேரிடுகின்றது.

அடுத்ததாக நெடுந்தீவில் காணப்படும் தொழில் முறைகளைக் கருத்திற்கொண்டால் பிரதானமாக ஏழு வகையான மீன்பிடி முறைகள் கைக்கொள்ளப்படுவதைக் காணலாம். அவையாவன,

வளிச்சல் வலை, சூடை வலை, அறக்கொட்டியான், தூண்டல், மூன்றரை வலை, களங்கட்டி என்பவையாகும்.

வலைகளும் அவ்வலைகளினால் எந்த இன மீன்களைப் பிடிக்கலாம் போன்ற விடயங்களை வேறு ஒரு அத்தியாயத்தில் விரிவாகப் பார்ப்போம்.

(தொடரும்)

# தென்னஞ் செய்கையில் ஈரப்பாதுகாப்புக்கான மானிய உதவி






கிளிநொச்சி மாவட்டத்தில் மக்கள் படிப்படியாக தங்கள் இடங்களுக்கு மீளக் குடியமர்ந்துவருவததால் பராமரிப்பின்றி கைவிடப்பட்ட பல்லாண்டுப் பயிர்களான தென்னை மற்றும் ஏனைய பயிர்களைப் பராமரிப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

நீண்டகாலமாக பெரியளவிலான செயற்பாட்டைக் கொண்டிராத தென்னைச் சபை தற்போது தெனனைச் செய்கையாளாகள் பயன்பெறத்தக்கதாக பல மானிய உதவித்திட்டங்களை அறிமுகப்படுத்துகின்றது. அத்திட்டங்களில் ஒன்றே ஈரக் காப்பிடல்.

இத்திட்டத்திற்குப் பசளை போடபபட்ட தற்கான பசளைக் கொள்வனவுச் சிட்டை இல்லாவிடினும் மானியம் வழங்கும்படி கிளி நொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் S.இராசநாயகம் 28.10.2002 அன்று கிளிநொச்சிக்கு வருகைதந்த தென்னைச் சபையின் தலைவர் லிங்கன் பெர்ணான்டோ விடம் விடுத்த கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனவே ஈரக்காப்பிடல் மானியத்துக்குப் பசளைச் சிட்டை இருந்தாலும் இல்லாவிட்டாலும் மானிய உதவி வழங்க தென்னைச் சபை நடவடிக்கை எடுத்து வருகின்றது.

**ஈரக்காப்பிடல் (உரிமட்டைக்குழி)**

இது வடமாகாணத்தைப் பொறுத் தவரை முக்கியமான ஒரு நடவடிக்கையாகும். வரண்ட காலமான வைகாசி தொடக்கம் புரட்டாதி மாதம் வரையான காலப்பகுதியில் தென்னை மரங்களுக்கு வரட்சியைத் தாக்குப் பிடித்திருக்கக்கூடியதாக உள்ளது. தேங்காய் உரிமட்டையில் கூடுதலான பொட்டாஸ் சத்துக் காணப்படுகின்றது. அத்துடன் நீரை உறிஞ்சி வைக்கக்கூடிய தன்மையும் கொண்டது.


தென்னையானது பொட்டாஸ் சத்தின் மேல் மிகவும் காதல் கொண்டது (Coconut is a Pottash Loving Plant). எனவே, நிலத்தில் இருந்து இழக்கப்படும் பொட்டாஸ் சத்துப் பொருளை உரிமட்டையை நிலத்தில் புதைப்பதன் மூலம் வழங்க முடியும்.

**எவ்வாறு உரி மட்டைக் குழி அமைத்தல்**



தென்னை மரமானது 30-45 பச்சை ஓலைகளையும் சிறு குரும்பை தொடக்கம் முட்டுக் காய்கள், தேங்காய் குலைகளையும் கொண்ட ஒரு பெரிய நிறையைத் தாங்கி யிருப்பதற்கு, அதற்கு உறுதுணையாக இருப்பது, அதன் நங்கூரம் போன்ற அமைப்பில் காணப்படும். 4000-8000 வரையிலான 3-4 மீற்றர் நீளமான நார்வேர் களாகும். அத்துடன் அடியில் இருந்து 3-4 அடிவரை உள்ள வேர்த்தொகுதி கடினத் தன்மை அடைந்து தாங்கும் சக்தியைக் கொடுத்துக் கொண்டிருப் பதுமாகும். எனவே, உரிமட்டைக்குழி அமைக்கும்போது பாரியளவில் வேர்கள் சேதமடையாது குழி அமைக்கப்பட வேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் சில இடங்களில் விவசாயிகள் தென்னை மரங்களை குறைந்த தூர இடைவெளியில் நாட்டியுள்ளார்கள். எனவே குழி அமைக்கும்போது வேர்



இரண்டு தென்னைகளுக்கு இடையில் குழி அமைத்தல் (குழியளவு -8'x4'x2')

பெரியளவில் சேதமடையக்கூடிய ஏதுநிலை உண்டு. இப்படிப்பட்ட இடங்களில் 4 மரங்களுக்கு நடுவில் குழி அமைக்கலாம். உரிய இடைத்தூரங்களில் நடுகை செய்யப்பட்டிருப்பின், 22'X22' , 24'X24', 25'X25', 26'X26' என இரண்டு மரங்களுக்கு இடையில் குழி அமைப்பது மிகச் சிறந்ததாகும். மேலும் இரண்டு வரிசைக்கிடையில் நடுவில் நீண்ட குழி அமைத்தும் உரிமட்டைகளைப் போட முடியும். கூடியளவில் வேர் வெட்டப்பட்டால், இதற்கு மானிய உதவியில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**குழி வெட்டும்போது கவனிக்க வேண்டிய சில விடயங்கள்**

1. கணோடேமா என்ற பங்கசு வெட்டப்பட்ட வேர் ஊடாகப்பரவி மரத்தை சுருங்கப் பண்ணி, ஓலைகள் மடிந்து விரைவாக மரம் அழியக்கூடிய வாய்ப்பு உண்டு. இந்த நிலை அநேக இடங்களில் காணப்படுகின்றது. சத்தம் சந்தடி இன்றி மரம் பட்டுப்போகும். தொடர்ந்து, வரிசையில் உள்ள அடுத்த மரத்துக்குப் பரவி நோய் நீண்டு செல்லும்.


2. சடுதியான உற்பத்தி குறைவு ஏற்பட்டு 2 வருடத்தின் பின்பே மரம் மீண்டும் காய்க்கத் தொடங்கும்.

3. தென்னைக்கு அருகில் வெட்டுவதால் பலமான காற்று வீசும்போது மரம் சாய்ந்து விழக்கூடிய அபாயம் உண்டு.

4. ஒரு மரம் தன் வாழ்க்கைக் காலத்தில் (75 வருடங்கள்), ரூபா 90,000 வரையான வருமானத்தைத் தரக்கூடியது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். எனவே,

**உரிமட்டைக் குழி அமைக்கும்போது அவதானிக்கவேண்டிய விடயங்கள்**

1. குழியினுள் தேங்காய் உரிமட்டை நிமிர்த்தியே இட வேண்டும். கவிழ்த்துப் போடுதல் கூடாது.
2. வேறு ஓலை, மட்டைகள் என்பவற்றை குழியினுள் போடக்கூடாது.
3. மழைக்காலம் முடியும்போது குழிகள் மூடப்பட வேண்டும்.
4. ஒன்றுவிட்டு ஒன்றாக குழிகள் அமைக்கப்பட வேண்டும்.
5. ஒரு ஏக்கரில் 30 குழிகள் அமைக்க வேண்டும். ஒரு குழிக்குள் 250 உரி மட்டைகள் போடப்படவேண்டும்.
6. மானியம் 2450 ரூபா வழங்கப்படும்.



**குறுகிய இடைத் தூரத்தில் நடுகை செய்யப்பட்ட தென்னை மரங்களுக்கிடையே, நான்கு தென்னைகளுக்கு நடுவில் குழிகளை அமைக்கலாம்.**

7. மரங்களுக்கு உரமிட்டால், 1 மெற்றிக் தொன் - 50 கிலோ கொண்ட, 26 பை உரம் - 1 மரத்துக்கு 3 கிலோ வீதம் போடப் பட்டால் 2,750 ரூபா ஊக்குவிப்பு மானியமாக வழங்கப்படும்.
8. உரம் மரத்தின் அடியிலிருந்து 6' தூர வட்டத்துள் தூவி, மண்ணைக் கொத்தி மண்ணுடன் கலக்க வேண்டும்.
9. மானியம் தொடர்பாக கிளிநொச்சிக் கச்சேரியில் புதன்கிழமைகளில் தென்னை அபிவிருத்தி தொழில்நுட்ப உத்தியோகத்தருடன் தொடர்புகொள்ளவும். இக்கொடுப்பனவுக்கான இறுதித் திகதி டிசெம்பர் 31ஆகும்.

- க.தனிநாயகம்.

# இராணுவ ரீதியில் மட்டுமல்லாது அரசியலிலும் தலைவரே வென்றார்!


## மாவீரர்தின நிகழ்வில் கேணல் சூசை

எமது இயக்கத்தைத் தடை செய்த நாடுகள் ஒஸ்லோ மாநாட்டில் எம்முடன் நேருக்குநேராக அமர்ந்து பேச்சுவார்த்தை நடத்துகின்ற நிலை உருவாகியிருக்கின்றது. எமது தலைவர் கடந்த காலங்களில் இராணுவ வெற்றிகளை மட்டுமல்ல, அரசியல் வெற்றிகளையும் பெற்றுள்ளார் - என்று மருதங்கேணியில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வில் உரையாற்றிய கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை தெரிவித்துள்ளார். அவரது உரையில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் 1982ஆம் ஆண்டு முதல் வீரமரணத்தை தழுவிக் கொண்ட லெப்ரினன் சங்கர் தொடக்கம் இன்று வரை 17,548 மாவீரர்கள் தமிழ் மண்ணின் விடுதலைக்காக வித்தாகியுள்ளனர்.

எமது தமிழீழத் தேசியத் தலைவரின் 48 ஆவது பிறந்த தினத்தில் இந்த நிகழ்வில் கலந்து கொள்வதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறோம். எமது விடுதலைப் போராட்டத்தை அடக்கவும், நசுக்கவும் முற்பட்ட தலைவர்கள் இன்று இல்லை. இரண்டாயிரம் சாரம் கட்டிய இளைஞர்களை, 48 மணி நேரத்துக்குள் அடக்கிவிடுவேன் என்று கூறியவர்களும் இன்று இல்லை.

நூற்றுக்குக் குறைவான மாவீரர்களை இழந்திருந்த, 1985 ஆம் ஆண்டு நாம் திம்பு பேச்சுவார்த்தைக்கு சென்றிருந்தோம். ஆனால், எமது நியாயமான கோரிக்கைகளை அப்போது இருந்த அரசியல் தலைவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. 650 இற்கு குறைவான மாவீரர்களை நாம் இழந்திருந்த காலத்தில்- லெப். கேணல் திலீபன், லெப்.கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன் உட்படப் பல வேங்கைகளை நாம் இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டதனால், இந்தியாவுக்கு எதிராக நாம் போர் நடாத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.



கேணல் சூசை

பல தடவைகள் பேச்சுவார்த்தையின் மூலம் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு தலைவர் முயற்சி எடுத்தார். இன்று, சர்வதேசம் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்கு முடிவுகாண வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றது.

பல நெருக்கடிகளுக்கு மத்தியிலும் சமாதானக் கரத்தை நீட்டி நிறகிறோம். புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட பல விடயங்கள் அரசினால இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. வடமராட்சி கிழக்கு மக்களின் போக்குவரத்து நலன் கருதி பருத்தித்துறை- மருதங்கேணி வீதியைத் திறப்பதற்குக்கூட இராணுவம், தமக்குப் பாதுகாப்பு இல்லை என மறுத்து நிற்கின்றது. இதனால் வடமராட்சி கிழக்கு மக்களின் சமூக, பொருளாதார நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளது.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஊடகவியலாளர் ஒருவர் கடற் கரும்புலிகளை அணிநடையில் பங்கேற்க செய்துள்ளீர்களே என என்னிடம் கேட்டிருந்தார். நிரந்தர தீர்வு ஏற்படும்வரை நாம், எதறகும் ஆயத்தமாகவும் இருக்கின்றோம் என அவருக்குத் தெரிவித்தேன்.

முல்லைத்தீவில் சிங்கள மக்களை மீளக்குடியமர அனுமதிப்பீர்களா எனக் கேட்கிறார்கள். அதே வேளை கொக்குத்தொடுவாய், கொக்கிளாய் ஆகிய இடங்களிலும் தமிழ் மக்களை மீளக்குடியமர அனுமதிக்க வேண்டும்.

ஆனையிறவை நாம் கைப்பற்றி, யாழ்ப்பாணத்தை நோக்கி முன்னேறியபோது பல நாடுகள், ஸ்ரீலங்கா அரசுக்கு ஆயுத உதவிகளையும, பொருளாதார உதவிகளையும், ஆளணி உதவிகளையும் வழங்கியிருந்தன. கடந்த காலத்தில் பல நாடுகள் எமது இயக்கத்தைப் பயங்கரவாத இயக்கம் என தடை செய்தன. நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெற்ற மாநாட்டில், இந்த நாடுகள் எம்முடன் ஒரே மேசையில் அமர்ந்திருந்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளன.

எமது தலைவர் கடந்த காலங்களில் இராணுவ ரீதியான வெற்றிகளை மட்டுமல்ல அரசியல் ரீதியான பல வெற்றிகளை நிலைநாட்டியுள்ளார்.

நிரந்தரத் தீர்வு கிடைக்கும் வரை, நாம் பலமாக இருக்க வேண்டும். எமது தலைவரின் கீழ் நாம் அணிதிரண்டு வெற்றிகளை ஈட்ட வேண்டும் என இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய கேணல் சூசை மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருதங்கேணி பிரதேச செயலாளர் வி.பி.வேலாயுதபிள்ளை, தாளையடி பங்குத் தந்தை பிரான்சிஸ், வடமராட்சி கிழக்கு புனரமைப்புக் குழுத்தலைவர் எஸ்.பொன்னம்பலம் ஆகியோரும் உரைநிகழ்த்தினர்.

தொடர்ந்து கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

(ச)

## இன்றைய நாள் இனிய நாள்

**28-11-2002 - வியாழக்கிழமை**

| | |
|---|---|
| நட்சத்திரம் | - பூரம் - இரவு - 8.48 வரை. அதன் மேல் - உத்தரம் |
| திதி | - அபரபட்ச நவமி பி.இ 3.00வரை அதன்மேல் தசமி |
| ராகுகாலம் | - 1.43 - 3.13 |
| சுபநேரம் | - 7.43 - 9.13 |

**மேடம்** :- தேகசுகக் குறைவு, மனதில் தாழ்வு மனப்பான்மை, கவலை, பிரயாணத் தடை, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**இடபம்** :- துணிவு குறைவு, வைத்தியச் செலவு, யாரையும் நம்பாத நிலை, வீண் அலைச்சல், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**மிதுனம்** :- விருந்தினர் வருகை, செய்தொழில் முன்னேற்றம், ஆடை ஆபரண பலன், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் சமநிலை.

**கர்க்கடகம்** :- வரவுக்கு மிஞ்சிய செலவு, பெண்களால் சண்டை, வீட்டில் பட்டிமன்றம் இதனால் கவலை, கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை.

**சிங்கம்** :- உளப் பூரிப்பு, நண்பர்கள், உறவினர்களுடன் மகிழ்ச்சி, பிரார்த்தனை வழிபாடு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் முன்னேற்றம்.

**கன்னி** :- மனச்சஞ்சலம், தேவையற்ற பிரச்சினை வீட்டில் எழலாம், அயலவர்களுடன் மௌனம் சாதிக்கவும், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்
அவர்களின் சகோதரரின் புத்திரர்
இ.வெங்கடேச ஐயர்.

**துலாம்** :- பணவரவு, செய்தொழில் லாபம், உளப்பூரிப்பு, பிரார்த்தனை வழிபாடு, கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை.

**விருச்சிகம்** :- மேலதிகாரிகளின் பாராட்டு, நண்பர்கள், உறவினர்கள் கண்டு மகிழ்தல், பிரார்த்தனை வழிபாடு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் சமநிலை.

**தனு** :- மனத்தில் பயஉணர்வு, வைத்தியச் செலவு, எதிரியின் தொல்லை, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**மகரம்** :- தூரப்பயணம் தவிர்க்க வேண்டும், புதிய ஒப்பந்தங்கள் எழுத வேண்டாம், எதிர்பாராத பயம், கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை.

**கும்பம்** :- நண்பர்கள், உறிவினர்கள் வருகை, ஆடை அலங்காரம், பெண்கள் உளப்பூரிப்பு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**மீனம்** :- பழைய கடன் வருகை, நேரம் நீக்கம், மகிழ்ச்சி, எடுத்த காரியம் வெற்றி, கல்வியில் ஊக்கம் வேண்டும் , வியாபாரம் சமநிலை.

## மாவீரர் நினைவாக பத்தாயிரம் பனம் விதை நடுகை

(மன்னார்)

மாவீரர் நாளையொட்டி மன்னாரிலுள்ள கல்விக் கட்டைக்காடு எனும் இடத்தில் நேற்று முன்தினம் 10 ஆயிரம் பனை விதைகள் நாட்டப்பட்டன.

மன்னார் மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட இந்நிகழ்வில் அரச அதிபர் ப.விஸ்வலிங்கம், அரசியல் துறைப் பொறுப்பாளர் அமுதாப், விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(08)

## வேலை வங்கி

தவிர்க்கமுடியாத காரணத்தால் இவ்வாரம் வேலை வங்கி விபரங்கள் வெளியிடப்படவில்லை.

அடுத்தவாரம் வேலை வங்கி விபரங்கள் வெளியிடப்படும் என்பதை எமது வாசகர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்

## எங்கே போகிறோம்...?

நேசன்

## இளைய தலைமுறையும் குடும்ப உடைவுகளும்...

காலம் மாறிக்கொண்டேயிருக்கிறது. மாறும் காலத்திற்கேற்ப வாழ்க்கையின் இயல்பும் மாறிக்கொண்டிருக்கிறது. மாற்றங்கள் வளர்ச்சியின் ஆரம்பங்களாகவும் அமைகின்றன. சில அடிப்படைகளின் உடைவு மற்றும் தேய்மானங்களுக்கும் இத்தகைய மாற்றங்கள் காரணமாகின்றன. திருமணம் ஒரு சமூகப்பிரச்சினையாக இருக்கிறது என்று அறிய நேரிடும்போது~ இதுவரை காலமும் சீதனம், சமூக வரம்புகள், பொருளாதாரம் இவற்றை அத்தகைய பிரச்சினைக்கான காரணங்களாக அறிந்து கொண்டோம். இன்றும் அந்த நிலை தொடர்கின்றது.... அது ஒரு பெரிய புதினமுமில்லை.

மேற்சொன்ன சீதனம் முதலான காரணங்களால் திருமணங்கள் நிறைவேற முடியாமல் போவது ஒரு நிலையென்றால், இத்தகைய தடைகளைப் பெரிதெனக் கொள்ளாமல் அவசர அவசரமாக திருமணங்கள் நிறைவேறி வருவது இன்னொரு நிலை~ திருமணம் நிறைவேறுமென்றால் திருப்திதானே..... பிரச்சினை இல்லைத்தானே என்போம்~ அது சரிதான்.

நிறைவேறுவதோடும், ஒரு சில மாதங்கள் குடும்பம் மகிழ்ச்சியாய் இருப்பதோடும் ~ சில சமயம் ஒரிரு குழந்தைகள் பெறுக் கொள்வதோடும் எல்லாம் முடிந்து.... புதிது புதிதாய் பிரச்சினைகள் முளைப்பதும், முரண்பாடுகள் தலையெடுத்துப் பூதாகரமாய் வளர்ந்து மனமுறிவுகளும், சில சமயம் மணமுறிவுகளும் குடும்ப உடைவுகளும் நேரிடுவதும்தான் துயரம் தருகின்ற நிலைமை!

இத்தகைய திருமணங்கள் மிகப்பெரும்பாலும் காதல் திருமணங்களாகவே இருப்பதை அவதானிக்கலாம். இத்தகைய காதல்களும்~ கண்டதும் மலர்ந்த அல்லது ஏதும் தவிர்க்க இயலாத சூழல் தோற்றுவித்த காதல்களாகத்தான் இருக்கின்றன. இன்னொரு விதமாகச் சொன்னால் உடல் ரீதியான ஈர்ப்பையே அடிப்படையாகக் கொண்டு தோன்றிய, அத்தகைய ஈர்ப்பின் விளைவாய் ஒன்றாகி பரஸ்பரம் பிரமிப்புகள் நீங்கிய பின், குறைபாடுகள் இருபுறமும் பெரிதாய்த் தெரிய, பின பிளவுகளுக்கும் பிரிவுகளுக்கும் உள்ளாகும் காதல்களாகத்தான் அமைகின்றன.

எமது வாழ்க்கை முறைக்கும் மரபுகளுக்கும் சமூக அமைப்பிற்கும் உட்பட்டு வாழ்கின்ற~ ஆண் பெண் இருபாலாரும் மிகப்பெரும்பாலும் திருமணக்காலம் வரை, ஆண்பற்றிப் பெண்ணும், பெண் பற்றி ஆணும் கொஞ்சமும் உணராதவர்களாகவே வாழ்கின்றார்கள்~ எனவேதான் எமது சமூக வரம்புகளுள் வாழும் ஒருவன் அல்லது ஒருத்தி தனது எதிர்ப்பாலுக்கு உரியவரை ஒரு பிரமிப்பிக்குரிய விடயமாகவே கருதுகின்றனர்~ எதிர்பாரத விதமாக இத்தகைய வர்கள் காதல் வசப்படுகின்றபோது இந்தப் 'பிரமிப்பு'தான் அவர்களை ஒருவர் வசம் ஒருவர் தள்ளி விடுகிறது. அந்தச் சமயத்தில் ஏனைய விடயங்கள்~ சமூக மற்றும் தனி மனித வாழ்வியல் அம்சங்கள் இவர்களுக்கு பெரிதாய்த் தெரிவதில்லை ~ போதாக் குறைக்கு எமது சினிமாக்களும் (இங்கே எமது சினிமா என்று துரதிஷ்ட வசமாக தென்னிந்திய தமிழ்த் திரைப்படங்களைத்தான் குறிப்பிட வேண்டியிருக்கிறது) வாழ்க்கை பற்றிய கலர்க் கனவுகளை விதைத்து , இளைவர்களை நுரைதின்று பசியாறத் தூண்டும் மாயா ஜாலங்களாகத்தான் அமைகின்றன~ அது மட்டுமல்லாமல் தட்டித்தவறி வாசிக்க புறப்படுகிற எமது சிறுசுகளும் ரமணிசந்திரனையோ அனுராதாரமணனையோ தான் தலையணைக்குள் பதுக்கி வாசிப்பவர்களாக இருக்கிறார்கள்.

இந்த நிலையில் இவர்களுக்கு கிடைக்கிற எந்த சினிமாவும் அல்லது புத்தகமும் வாழ்க்கை பற்றிய தரிசனங்களைத் தந்துவிடமுடியாது.

எனவே~ இந்த மாயைகளுக்கு முடங்கிப்போய் தமது வாழ்க்கைகளும் தம் மனதின் கனவு இழைகளால் பின்னப்படும் என எண்ணிக் கொண்டு வாழ்க்கையில் நுழைந்து விட்டு, உண்மையின் நிர்த்தாட்சண்ய தரிசனத்தில் மிரண்டு போய் பின்வாங்கி ஓட முனைகிறார்கள் ~ குடும்பம் பிரிகிறது.

காதல் சொட்டச் சொட்ட கடிதம் பரிமாறி, ஊசியை நெருப்பிற் சுட்டு உடம்பில் பெயரெழுதிக் கொள்பவர்கள், தங்களின் சுயங்களைத் தாமே பரஸ்பரம் எதிர்கொள்ள முடியாத பலவீனர்களாய் நிரந்தரமாகவே முகம் திருப்பிக் கொள்கிறார்கள். இன்றெல்லாம் பல வழக்குகள் மற்றும் முறைப்பாடுகள் இத்தகைய குடும்ப முறிவுகள், ஏமாற்று நடவடிக்கைகள் பற்றியவையாகவே இருக்கின்றன.

அண்மையில் ஒரு குடும்பம் உடைந்துபோன விஷயம் பற்றி அறிய நேரிட்டது. மிகவும் இளைய வயதில் காதல் வசப்பட்ட அந்த இருவரும் திருமணம் செய்து கொள்வதை இருவரின் பெற்றோரும் விரும்பவில்லை~ அந்தஸ்து மற்றும் ஜாதி விஷயங்களும் ஒத்துப்போகவில்லை. திருமணத்தைப் பதிவு செய்துகொள்ளும் காலம் வரை ஒருவாறு காத்திருந்து தமது எண்ணப்படியே வீட்டை விட்டு வெளியேறி பதிவுத்திருமணம் செய்து கொண்டார்கள் ~ காலப்போக்கில் பையனின் வீட்டார் ஒருவாறு மனம் தேறி இவர்களை அங்கீகரித்து ஏற்றுக் கொண்டார்கள்.

குழந்தையும் ஒன்று கிடைத்தது. பையனின் தாயார் மற்றும் தந்தையோடு அந்தப்பெண்ணுக்கு முரண்பாடு தோன்றியது~ வெறும் கையோடு வந்தவளென்று குத்திக் காட்ட தொடங்கினார்கள். தனது குடும்ப அந்தஸ்த்தை விட்டுக் கொடுக்காமல் இந்தப் பெண்ணும் பேசப்போக, வாய்த்தர்க்கம் அடிபிடியாய் வளர, மாமியார் மைத்துன கொடுமை அதிகரித்து முடிவில், அந்தப் பெண் பிறந்த வீட்டிற்கே செல்லும் நிலைமை தோன்றி ~ இப்போது விவாகரத்து ஏற்பட்ட நிலையில் இருவரும் தனித்து வாழ்கிறார்கள். கையில் ஒரு பிள்ளையோடு வாழ்க்கையை ஒரு பெரிய கேள்வியாய் எதிர்கொண்டு நிற்கிறாள் அந்தப் பெண்.

ஆரம்பத்தில் காதல் பெரிதாய்ப்பட்டது. யார் எது சொன்னாலும் இருவரும் இணைவது சாதனைபோல் தோன்றியது. குடும்பமாய் இணைந்து மயக்கம்.....பிரமிப்பு எல்லாம் இல்லையென ஆகிய பிறகுதான் வித்தியாசங்கள் பெரிதாய் தெரிந்தன~ அந்தச் சமயத்தில் அந்த வித்தியாசங்களைச் சிறிதாக்கிவிடும் விதமாக அவர்களின் காதல் பலமாக இல்லை. மலைபோல் வந்த எதிர்ப்பைப் பனிச்சுவராய் தகர்த்தெறியத் தூண்டிய காதல் இப்போது சின்னதொரு காற்றுக்கே தள்ளாடி அல்லாடிப் போய்விட்டது.

~ உண்மையில் என்னதான் நிகழ்ந்தது? ~ யார் குற்றவாளி? ~ எதிலே குறைபாடு?

~ எழுத்தாளர் ஜெயகாந்தன் ஒரு நூலின் முன்னுரையில் சொன்னது இந்த இடத்துக்குப் பொருத்தம் என்று நினைக்கிறேன்.

"காதல் என்பது அற்பமானது. அது தோன்றுவதற்கும் அழிவதற்கும் அற்ப காரணங்களே போதும். அது வளர்ச்சியடைவதற்கும் மேன்மையுறுவதற்கும் கூட சம்பந்தப்பட்டவர்களின் வேறு குணநலன்களே காரணமாக அமைகின்றன..."

~ சம்பந்தப்பட்டவர்களின் வேறு குணநலன்கள்.... ~ இதிலேதான் குறைபாடோ? குறைகளைத் தாண்டி நேசிக்கின்ற உண்மை அன்பிதயம் இருவரிடமும் இல்லா போனதோ?

குடும்பமாய் இணைந்து வாழ்ந்தும் ஒருவரின் சுயம் (EGO) அடுத்தவரால் சகிக்கப்பட முடியாத ஒன்றாகவே இருந்துவிட்டதா? ~ பரஸ்பர நம்பிக்கை மனிதாபிமானம் ~ கருணை ~ பொறுமை ~ தனக்கான கடமையை மறக்காத நேர்மை, இந்தப்பண்புகள் இல்லாது போயினவோ?

குடும்பமென இருவர் இணைந்த பின்னும் அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கைக்குள் தலை நுழைக்கிற மற்றவர்கள் ~ பெற்றோர் ~ சகோதரர்கள் போன்றோரின் அநாகரிக அத்துமீறல் அநியாயமாக அந்தக் குடும்பத்தை உடைத்துவிட்டதோ?

வாழ்க்கை எத்தனையோ தூரம் முன்னேறி உலகம் எங்கேயோ போய்க் கொண்டிருக்கையிலும் கூட, எமது பழைய இருட்டு மூலைகளை விட்டு வெளியேற நாம் தயாராக மாட்டோமா? அடுத்தவர் வாழ்வில் தலைநுழைக்கும் அநாகரிகம் இன்னும் எத்தனை காலம் எமது பெரியவர்களிடம் இருக்கப் போகிறது? ~

*- மீண்டும் சந்திப்போம்.*

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*தேறற்க யாரையும் தேராது தேர்ந்தபின்*
*தேறுக தேறும் பொருள்*

*- திருக்குறள்.*

# நமது நோக்கு

## உண்மை நிலையை உணர வேண்டும்!

ஒஸ்லோ மாநாட்டில் அமெரிக்கா சார்பில் கலந்துகொண்ட பிரதி இராஜாங்க அமைச்சர் ஆர்மிரேஜ் தெரிவித்த சில கருத்துக்கள் - அமெரிக்கா போன்ற நாடுகள், தமிழர்களின் விடுதலைப் போராட்டம் பற்றி கொண்டிருக்கும் தப்பபிப்பிராயத்தையும், உண்மைக்கு மாறான தகவல்களைக் கிரகித்துக் கொள்வதால் ஏற்பட்ட தவறான கருத்து நிலையையும் எடுத்துக் காட்டியுள்ளன.

விடுதலைப் புலிகளின் போராட்டத்தை, வன்முறை சார்ந்த பயங்கரவாதப் போராட்டமாகவும்- அதனைக் கைவிட இனி அவர்கள் தயாராக வேண்டுமெனவும் ஆர்மிரேஜ் அறிவித்திருப்பது - இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக அமெரிக்கா இன்னமும் தெளிவான பார்வைக்குள் வந்தாக வேண்டியதன் அவசியத்தை உணர்த்தியுள்ளது.

இனப்பிரச்சினை பற்றிய அமெரிக்காவின் தகவல் திரட்டலென்பது - சிங்கள அரசாங்கங்கள் சார்ந்ததாகவும், கொழும்பை மையமாக வைத்த பார்வையாகவும் இருந்ததன் வெளிப்பாடாகவே ஆர்மிரேஜ்ஜின் கருத்துக்கள் அமைந்திருக்கின்றன.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி. அன்ரன் பாலசிங்கம் இதற்கான தெளிவான பதிலொன்றைக் கூறியிருக்கின்றார்.

அமெரிக்கா பயங்கரவாதம் எனக் கருதுவது, விடுதலைப் புலிகளுக்குப் பொருந்தமாட்டாது என அழுத்தம் திருத்தமாக அன்ரன் பாலசிங்கம் வலியுறுத்திக் கூறியிருப்பது - அமெரிக்காவின் தவறான கருத்து நிலையை மாற்றவேண்டிய அவசியத்தை உணர்த்தியுள்ளது.

அமெரிக்காவைப் பொறுத்தவரையில் உலக நாடுகளில் நடைபெற்ற விடுதலைப் போராட்டங்கள், அதனது பிராந்திய நலனுக்குச் சாதகமாகாத சந்தர்ப்பங்களிலெல்லாம் அவற்றைப் - பயங்கரவாதப் போராட்டங்களாகவே சித்தரித்து வந்தது.

தனது அரசியல், இராணுவ நலன்களுக்கான- அமெரிக்காவின் கடந்தகால அனுபவங்களை நோக்குமிடத்து இவை புலனாகும்.

ஆனால், அதேயளவான அளவுகோலை, ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திலும் அமெரிக்கா பயன்படுத்த முனைவது எவ்வகையிலும் ஈழத்தமிழர்களால் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக அமையாது.

பௌத்த சிங்களப் பேரினவாதத்திற்கும் அரச பயங்கரவாதத்திற்கும் பல்லாயிரக்கணக்கான உயிர்களை இழந்து, தமிழர் தாயகம் முழுவதுமே சுடுகாடாக சிதைக்கப்பட்டபோது, இனியும் பொறுத்திருக்கமுடியாது எனத் தற்காப்புக்காகத் தொடங்கிய யுத்தத்தை பயங்கரவாதமாகக் கருதுவதை எந்தவொரு ஈழத்தமிழனுமே ஏற்றுக் கொள்ளமாட்டான்.

எனவே - இலங்கை இனப்பிரச்சினையின் உண்மையான பரிமாணத்தை தெரிந்துகொண்டு அமெரிக்கா தனது நகர்வுகளை மேற்கொள்ள வேண்டுமென்றே ஈழத்தமிழர்கள் எதிர்பார்க்கின்றனர்.

நியாயமான அரசியல் தீர்வொன்றை நாடி நிற்கும் எம் மக்களுக்கு சர்வதேசத்தின் குறிப்பாக அமெரிக்காவின் ஆதரவு என்பது எதிர்பார்க்கப்படுவதொன்றாக இருக்கும்போது,

- அது கடந்தகாலத்தின் உண்மையான வரலாற்றையும் விடுதலைப் போராட்டத்தின் நீதியின் பாலான இலக்குகளையும் உள்வாங்கியதாக அமைய வேண்டும் என்பதே ஈழத்தமிழர்களின் நிலைப்பாடாகவும் உள்ளது.

# நெடுந்தீவில் நேற்று பொதுமக்கள் மீது பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டு வீச்சு

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் நேற்று நண்பகல் 1.30 மணியளவில் பொது மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையை அடுத்து பொலிஸார் கண்ணீர்ப் புகைக்குண்டு வீச்சுத்தாக்குதலை நடத்தினர்.

ஈ.பி.டி.பி. மற்றும் கடற்படை, பொலிஸ் முகாம்களுக்கு அண்மையில் திறந்திருந்த தேநீர்க்கடையொன்றை மூடுமாறு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பொதுமக்களின் பிரதிநிதிகள் இருவர் கேட்டனர்.

இதனை அவதானித்த பொலிஸ் அவர்களைத் துரத்தி வந்து பிடித்தனர். இதையடுத்து உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்து பொதுமக்கள் பொலிஸார் மீது கற்களை வீசித் தாக்கிவிட்டு, அவ்விரண்டு பேரையும் விடுவித்தனர்.

இதையடுத்துப் பொலிஸார் பொதுமக்களை நோக்கி கண்ணீர்ப் புகைக்குண்டை வீசித் தாக்கினர். இதனால் அங்கு பதற்றநிலை ஏற்பட்டது. சம்பவத்தைக் கேள்வியுற்று அங்கு நின்ற யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகள உடனடியாக அப்பகுதிக்குச் சென்று பார்வையிட்டுள்ளனர்.

இதேவேளை - இச்சம்பவம் குறித்து ஈ.பி.டி.பி. வெளியிட்டுள்ள அறிக்கையில் பொதுமக்கள் நடத்திய தாக்குதலில் 2 பொலிஸார் காயமடைந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(112,113)

# சர்வதேச சக்திகளின் கொந்தராத்துக்காரர் என பீரிஸ் மீது விமல் வீரவன்ச பாய்ச்சல்



விமல் வீரவன்ச

(கொழும்பு)

இலங்கையில் தனி ஈழம் ஒன்றை நிறுவுவதற்கு பல வெளிநாட்டுச் சக்திகள் முனைகின்றன. இதற்கான கொந்தராத்து வேலையை அமைச்சர் ஜி.எல். பீரிஸ் பொறுப்பேற்றிருக்கிறார். இவர் தனது வேலையை நிறைவேற்றுவதில் மிகுந்த கவனமாகச் செயற்பட்டு வருவதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச நாடாளுமன்றத்தில் குற்றம் சாட்டியுள்ளார்.

அரசியலமைப்பு விவகாரங்களில் நிபுணரான அமைச்சர் பீரிஸ், அரசியலமைப்புக்கு முரணான காரியங்களில் தயக்கமின்றி ஈடுபடுகின்றார். தாய்லாந்தில், புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், உயர் நீதிமன்றத் தீர்ப்பை விமர்சனம் செய்யும் போது இவர் கண்டும் காணாதவர் போல இருந்துவிட்டார்.



ஜி.எல்.பீரிஸ்

இலங்கையைப் பல நாடுகளின் கூட்டான அரசாங்கமாக மாற்றும் சர்வதேச சதியில் அமைச்சர் பீரிஸ் ஒரு பங்குதாரராகவே இருக்கின்றார். விடுதலைப்புலிகள் தமது தேவையைக் கேட்கும் முன்னரேயே அமைச்சர் பீரிஸ் அவற்றை வழங்கி விடுவார்.

புலி கேட்பதைவிட அதிகமாகவே ஜி.எல்.பீரிஸ் வழங்கியுள்ளார் எனச் சமாதானப் பேச்சுக்குச் சென்று வந்த அமைச்சர் ஒருவர் தன்னிடம் தெரிவித்ததாகவும் விமல் வீரவன்ச மேலும் தெரிவித்துள்ளார்.

# ஒஸ்லோவிலிருந்து திரும்பிய ரணில் இன்று சந்திரிகாவைச் சந்திப்பார் !

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளார். ஒஸ்லோவில் நடந்த உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்து கொண்டுவிட்டு நேற்று ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பினார்.

இந்தச் சந்திப்பின்போது ஒஸ்லோவில் நடைபெற்று முடிந்த உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் தொடர்பாக ஜனாதிபதிக்கு அவர் விளக்கமளிப்பார் எனவும் தெரியவருகின்றது.

இந்தச் சந்திப்பின்போது சிறந்த அரசுக்கான தேசியகுழு என்ற ஜனாதிபதி சந்திரிகாவின் திட்டம் குறித்தும் ரணில் பேச்சு நடத்துவார் எனத் தெரியவருகின்றது. பிரதமர் தலைமையில் தேசிய குழுவொன்றை அமைக்கும் யோசனையை ஜனாதிபதி தனது எட்டாவது வருடப் பூர்த்தி தினத்தன்று முன்வைத்திருந்தார். இக்குழுவில் அனைத்துக் கட்சிகளையும் இடம்பெறச்செய்வது என ஜனாதிபதி சந்திரிகா யோசனை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# புனர்வாழ்வு நிலையத்திலிருந்தவருக்கு கஞ்சா கொடுத்த இராணுவச் சிப்பாய்

### கைது செய்ய மல்லாகம் நீதிமன்று உத்தரவு

(சுன்னாகம்)

தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையத்தில் களவுக் குற்றச் சாட்டுக்காக 6 1/2 வருட சிறைத்தண்டனையை அனுபவித்து வரும் லியனகே றசீக்கா றோகன என்பவருக்கு, கஞ்சா பாவித்தமைக்காக மூன்று மாதகால கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது - திருகோணமலை இராணுவ முகாமைச் சேர்ந்த உத்தியோகத்தர் பொருட்கள் கொண்டு வரும்போது கஞ்சாவையும் கொண்டு வந்து தந்ததாகவும் அவரைத் தன்னால் அடையாளம் காட்ட முடியும் எனவும் - நீதிமன்றில் தெரிவித்ததை அடுத்து சம்பந்தப்பட்டவரை கைதுசெய்யுமாறு மல்லாகம் நீதிமன்ற நீதிவான் சுப்பிரமணியம் கட்டளையிட்டார்.

(87)

### குறிப்பிட்ட சில நாடுகளில் உள்ள

# இலங்கைத் தூதரகங்களை மூடிவிட அரசாங்கம் முடிவு

(கொழும்பு)

வெளிநாடுகளில் உள்ள சில தூதரகங்களை மூடிவிடுவதற்கு வெளிவிவகார அமைச்சு தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது. சில நாடுகளில் இயங்குகின்ற இலங்கைத் தூதரகங்கள் பொருளாதார செலவினங்களை ஏற்படுத்துவதாலும், செயற்பாடுகள் சிறப்பாக அமையாததாலுமே அவற்றை மூடிவிட அமைச்சரவை உபகுழு தீர்மானித்துள்ளது.

இந்த உபகுழுவில் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ, ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட, லக்ஷமன் கிரியெல்ல, மகிந்த சமரசிங்க ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

பிரிட்டன் மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் அதிகளவிலான செலவுகளைச் செய்து வருவதாக தெரிவித்துள்ள இந்த உபகுழு, இவற்றையும் மூடிவிடுவதா என்பது குறித்து எதுவும் தெரிவிக்கவில்லை.

# 5 ஆயிரத்து 800 தமிழ்மொழி மூல ஆசிரியர்களுக்கு வட-கிழக்கில் வெற்றிடம்

### மாகாண கல்விப் பணிப்பாளர் இஸ்ஸதீன்

(கிளிநொச்சி)

வட-கிழக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் 6179 ஆசிரியர்களுக்கு வெற்றிடம் நிலவுவதாகவும் இதனை நிரப்புவதற்கு உடனடிக் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் வட-கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் எம்.ஐ.இஸ்ஸதீன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நடந்த வட-கிழக்கு கல்வி அபிவிருத்தி தொடர்பான மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வட-கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் பெருமளவிலான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது. 5,802 தமிழ்மொழி மூல ஆசிரியர்களுக்கும், 377 சிங்கள மொழி மூல ஆசிரியர்களுக்கும் பற்றாக்குறை நிலவுகின்றது.

இங்குள்ள பாடசாலைகளில் மாணவர்களுக்குப் போதிய வசதிகள் இல்லை. விஞ்ஞான ஆய்வு கூட வசதியோ, மனையியல் கூட வசதிகளோ அநேகமான பாடசாலைகளில் இல்லை. இந்த நிலைமையிலிருந்து விடுபடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் தனது உரையில் தெரிவித்துள்ளார்.

# ஒஸ்லோ உதவி மாநாடு வெற்றி என பீரிஸ் அறிவிப்பு!

(கொழும்பு)

ஒஸ்லோவில் நிதி வழங்கும் நாடுகளின் மாநாடு எதிர்பார்தத வெற்றிகளை அளித்துள்ளதாக அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் ரோக்கியோவில் நடை பெறவுள்ள அடுத்த உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தின்போதும் இலங்கைக்கு பெருமளவிலான உதவிகள் கிடைக்கும் எனத் தாம் எதிர்பார்ப்பதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

(01)

# றொறன்ரோவில் புலிகளுக்கு எதிரான சர்வதேச மாநாடு

# பின்னணியில் சோவின் மருமகள், கதிர்காமரின் பெறாமகன்

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான பல சக்திகள் கலந்து



சோ

கொண்ட சர்வதேச மாநாடு ஒன்று கனடா றொறன்ரோ நகரத்தில் நடந்து முடிந்துள்ளது. காதும் காதும் வைத்தது போல் மிகவும் இரகசியமான முறையில் றொறன்ரோ பல்கலைக்கழக வெளிவாரிப் பயிற்சிக்கான மண்டபம் ஒன்றில் நடைபெற்ற இந்த மாநாட்டுக்கு முன்கூட்டியே அழைக்கப்படாத எவரும் அனுமதிக்கப்படவில்லை.

இத்தகைய மாநாடு ஒன்று நடைபெறுவதாகக் கடைசி நேரத்தில் அறிந்துகொண்ட முன்னாள் தமிழீழச் சங்கத் தலைவரும் இந்நாள் புதிய குடிவரவாளர் நலன் பேணும் அதிகாரியுமான ஸ்ரீ குகன் ஸ்ரீஸ்கந்தராஜா அங்கே சென்ற போது-அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

இலங்கையின் முன்னாள் உச்ச நீதிமன்ற நீதியரசர் ஸ்ரீஸ்கந்தராஜாவின் புதல்வரான ஸ்ரீகுகன் கனடாவில் 30 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வருகிறார். "ஸ்ரீ அண்ணர்" என்று அனைவராலும் அழைக்கப்படுகின்ற இவர் இனத்துவேஷத்துக்கு எதிரான ஆணைக்குழு உறுப்பினராகக் கடமையாற்றி நற்பெயர் பெற்றவர்.

அங்கு நடந்தது என்ன? என்று கேட்டபோது பின்வருமாறு தெரிவித்தார்-

இலங்கையில் சமாதானம் ஏற்படுத்துவது தொடர்பாக இங்குள்ள அங்கிலிங்கன் திருச்சபையின் ஆதரவுடன் ஓர் அமைப்பு செயற்பட்டு வந்தது. நான் உட்பட இங்குள்ள பலர் நல்லெண்ணத்துடன் இக்குழுவின் கூட்டங்களுக்குச் சென்று வந்தோம்.

ஆனால், நாளடைவில் விடுதலைப்புலிகளுக்கு எதிரான, சந்திரிகா குமாரதுங்கவுக்கு ஆதரவான கூட்டம் ஒன்று இந்த அமைப்பில் ஆதிக்கம் செலுத்த முற்பட்டது. அத்துடன் விடுதலைப்புலிகளுக்குச் சார்பான கருத்துக் கொண்டவர்களை ஓரங்கட்டி ஒதுகக முற்பட்டது.

ஜனநாயக நாடான கனடாவில் இப்படி ஜனநாயகத்தைக் கட்டுப்படுத்தும் போக்கினை ஏற்றுக் கொள்ள முடியாத நானும் என்போன்ற சிலரும் இந்தக் கூட்டங்களுக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொண்டோம்.

இந்த அமைப்பின் பின்னணியுடன் "இலங்கையில் சமாதானமும் ஜனநாயகமும்" என்ற தலைப்பில் ஒரு மாநாடு றொறன்ரோவில் நடக்கவிருப்பதாகக் கடைசி நேரத்தில் அறிந்து கொண்ட நான்- சமாதானம், ஜனநாயகம் மீது கொண்ட வாஞ்சையினால் ஒரு பார்வையாளராகக் கலந்து கொள்ள அங்கே சென்றேன்.

அங்கே மாநாட்டை நடத்துகினறவராகக் கெவின் ஷிமின் என்பவர் காணப்பட்டார். இவர் சர்வதேச மன்னிப்புச் சபையுடன் தொடர்புள்ளவர். அவர் என்னைத் தடுத்தி நிறுத்தி மாநாட்டில் இடம் இல்லை எனறு கூறினார். ஆனால் எவ்வளவோ இருக்கைகள் காலியாக இருந்தன.

ஆயினும் நான் பரவாயில்லை நின்று கொண்டு பேச்சுக்களைக் கேட்கின்றேன் என்று சொன்னேன். அப்போது, கெவின் இது தெரிவு செய்யப்பட்ட சிலருக்குத்தான். முன்கூட்டியே அழைப்பு அனுப்பப்பட்டவர்களைத்தவிர வேறு எவருக்கும் அனுமதி கிடையாது என்று கூறினார்.

நான் இது ஜனநாயகத்திற்கு விரோதமான செயல் என்று சுட்டிக் காட்டினேன். அத்துடன் இது போனற மகாநாடுகளில் அனைத்து தரப்புக் கருத்துக்களும் பிரதிபலிக்க வேண்டும் என்றும் கூறினேன்.

அப்போது கெவின் உங்களைப் போன்ற விடுதலைப்புலிகளின் அபிமானிகளை உள்ளே விட்டால் வந்திருப்பவர்கள் பாதுகாப்பாக இருக்க மாட்டார்கள் என்று கூறினார்.

நான் வன்முறையாளன் அல்ல என்று கூறிவிட்டுத் தொடர்ந்தும் வாதாடுவது பண்பு அல்ல என்பதால் வெளியேற முற்பட்டேன்.

ஆயினும், இலங்கையில் சமாதானத்தை விடுதலைப்புலிகளின் பங்களிப்பின்றி ஏற்படுத்த முடியாது என்றும், இன்று புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முழுமையாக ஈடுபட்டு சர்வதேச அங்கீகாரம பெற்றுவருகின்றவேளையில் கனடாவில் நடக்கும் மாநாடு இப்படி மூடப்பட்ட கதவுக்குப்பின் நடப்பது விசித்திரம் என்று சுட்டிக் காட்டினேன்.

நான் வெளியேறிச் சென்ற போது எனக்குப் பின்னால் ஜோன் ஆர்க்யு என்பவர் வந்தார். வன்கூவரில் இருக்கும் ஜோன், சர்வதேச மன்னிப்புச்சபையுடன் தொடர்பு கொண்டவர்.

அவர் என்னுடன் நீண்ட நேரம் மண்டபத்துக்கு வெளியே உரையாடினார்.

இத்தகைய கெடுபிடிகளுக்குக் தாம் வருந்துவதாகவும், மாநாடடை ஒழுங்கு செய்த கெவின் ஷிமின்தான இந்த நிலைமைக்குக் காரணம் என்றும் அவர் விளக்கம் அளித்தார்.

சர்வதேச மன்னிப்புச் சபையில்



கதிர்காமர்

இருந்து கொண்டு ஒரு பக்கச்சார்பாக நடந்து கொள்கிறார் என்றும், புலிகளுக்கு எதிரான சக்திகளுடன் இரண்டறக் கலந்துள்ளார் என்றும் பல புகார்கள் கனடிய தமிழர்களிடம் இருந்து தெரிவிக்கப்படுவதாகவும் அவர் கூறினார். இச்சமயம் ரவி என்ற இளைஞரும் அங்கே வந்தார். எனக்கு நடந்ததைக் கேள்வியுற்று அவரும் என்னுடன் வெளிநடப்புச் செய்தார். பின்னர் வெளிநாடுகளில் இருந்து வந்த சிலர் இவ்வாறு மாநாடு நடத்தப்பட்டதைப் பற்றி மனவருத்தம் அடைந்ததாக அறிந்தேன். குறிப்பாக பிரான்ஸில் இருந்து வந்த சிலர் பெரும் அதிர்ச்சியடைந்ததாகக் கேள்விப்பட்டேன்.

அத்துடன் மாநாடு பற்றிய அதிருப்தி காரணமாக மதியத்துக்குப் பின்னரும், மறுநாளும் கலந்து கொண்டவர் எண்ணிக்கை குறைந்து போனதாக அறிந்தேன்.

இது பற்றி அங்கிலிகன் திருச்சபை, மன்னிப்புச்சபைக்கு உத்தியோகபூர்வமாக முறைப்பாடு செய்ய இருக்கிறேன். விடுதலைப்புலிகள் உட்பட அனைத்துத் தரப்பினரையும் ஒன்று சேர்த்துக் கருத்துப் பரிமாற்றம் செய்தால்தான் ஆக்கபூர்வமாக எதையும் செய்யமுடியும்.

ஆனால் என்னைப் போன்ற நடுநிலையாளர்களைப் பார்வையாளர்களாகக்கூடக் கலந்து கொள்ள அனுமதிக்காத மாநாடு, கனடாவின் ஜனநாயகக் கட்டுக்கோப்பிற்கு முற்று முழுதாக முரணானது. இவ்வாறு மனம் நொந்த நிலையில் ஸ்ரீகுகன் கருத்துத் தெரிவித்தார்.

இதேவேளை- சனிக்கிழமை நவமபர் 23, ஞாயிறு நவம்பர் 24 நடைபெற்ற மாநாடு பற்றி ஆய்வு செய்த போது மகாநாட்டில் வெவ்வேறு நாடுகளில் உள்ள பல விடுதலைப்புலி எதிர்ப்புச் சக்திகள் கலந்து கொண்டதாகத் தெரியவந்தது.

இதேவேளை, இத்தகைய அரசியல் கண்ணோட்டம் இல்லாத சில மனித உரிமைவாதிகளும் கலந்து கொண்டிருந்தனர். இது தவிர பல பல்கலைக்கழகங்களில் இலங்கைப் பிரச்சினை பற்றி ஆய்வு செய்பவர்களும் சமாதான விரும்பிகளுமான பிற இனத்தவர்களும் இதில் கலநது கொண்டமை குறிப்பிடத்தக்கது.

விடுதலைப்புலிகளை தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக அங்கீகரிக்கக் கூடாது, விடுதலைப் புலிகளின் பொறுப்பில் இடைக்கால நிர்வாகசபை கொடுக்கக்கூடாது, புனர்நிர்மாண அபிவிருத்தி வேலைகளுக்கான நிதி எதுவும் புலிகளுக்குக் கொடுக்கக் கூடாது போன்ற கருத்துக்களே மாநாட்டுத் தீர்மானத்தின் அடிநாதமாக விளங்கியது என்றும் அதில் கலந்து கொண்ட சிலர் தெரிவித்தனர்.

மாநாட்டில் பேசிய டேவிட்சன் ஈ.பி.டி.பி.கட்சிக்கு ஆதரவாகப் பேசினார். இவர் கனடாவிலிருந்து இலங்கைக்குச் சென்று ஈ.பி.டி.பி.கட்சித் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் ஈடுபட்டுவந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோல் இங்குள்ள புலி எதிப்பாளர்களைக் கொண்ட "தேடகம்" கோஷ்டியினர் சிலரும் மாநாட்டில் கலந்து கொண்டு புலி விரோதக் கருத்துக்களை உமிழ்நதனர்.

மாநாட்டின் பின்னணியில் செயற்பட்டவர்களில் முக்கியமானவர் இருவர் அமெரிக்காவில் இருந்து வந்ததாக அறியப்படுகிறது. ஒருவர் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் சகோதரர் மகனான அருணன் கதிர்காமன். மற்றவர் துக்ளக் சோவின் மருமகளான நிருபமா சுப்பிரமணியம். இந்த நிருபமா என்பவர் சென்னை இந்து பத்திரிகையின் கொழும்பு நிருபராகக் கடமையாற்றி தமிழ் மக்களுக்கு எதிரான செய்திகள் எழுதி வந்தவர். இப்போது இவர் அமெரிக்காவில் இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

*நன்றி:- கனடா ஈழநாடு*

---

கூட்டுறவுத்துறைச் சவால்களை

## உறுதி, அர்ப்பணிப்பு, நேர்மை என்பன மூலம் வெற்றி கொள்ளலாம்!

கூட்டுறவுத்துறைக்கு ஏற்படும் சவால்களை உறுதியுடனும், நேர்மையுடனும், அர்ப்பணிப்புடனும் செயற்படுவதன் மூலம் வெற்றி கொள்ளலாம் எனவும் கடந்த 17 ஆம் திகதி கட்டைவேலி - நெல்லியடி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினால் இலகு கடனில் தையல் மெஷின்களை வழங்கும் வைபவத்தின்போது உரையாற்றிய சங்கத்தலைவர் சிதம்பரப்பிள்ளை தெரிவித்தார்.

இவ்விழாவில் கௌரவ விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலா பங்குபற்றி பிரதம விருந்தினரைக் கௌரவித்ததும், திரு.திருமதி பாஸ்கரன் தம்பதியினரைப் பாராட்டியும் உரையாற்றினர்.

இதில் வடபகுதியின் மூத்த கூட்டுறவாளர்களாகிய யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ.கனகசபாபதி, சமாசத் தலைவா சி.வி.கே. சிவஞானம், முன்னாள் கூட்டுறவுச் சபைத் தலைவரும், நமது ஈழநாடு நிறுவன இயக்குநருமான சி.சிவமகாராசா ஆகியோரும் பங்குபற்றி சிறப்புயையாற்றினர்.




---


வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்.



பெயர் : ஜெயராஜா சுவர்ணன்
முகவரி: பொலிகண்டி, வல்வெட்டித்துறை.

மூன்றாவது அகவையில்.

பெயர் : க.நிஷாந்தன்
முகவரி: வேல வளவு, ஏழாலை.



ஐந்தாவது அகவையில்.



பெயர் : சர்வானந்தன் திவாணி
முகவரி: கற்கோவளம், பருத்தித்துறை.

ஏழாவது அகவையில்.

Name:- K.ADSHAYAN
Address:-
Gamle Trondheims, Vel -38,
1481 - Hagan,
Norway (Kaithady).



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி:------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளன.


------------------
பெற்றார் ஒப்பம்

குறிப்பு: இம்மாத முடிவு வரை மட்டும் ஐந்து கூப்பன்களை அனுப்பலாம்

# கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திலிருந்து....




















தமிழின விடிவிற்காக
தேச விடுதலைக்காக
மக்களுக்காக
தமது இரத்தத்தையும்
வியர்வையையும் சிந்திய
மாவீரர்களுக்கு
எமது
இதய அஞ்சலிகள்

**தொண்டமனாறு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்**

பெரிய கடற்கரை,
தொண்டமனாறு.



## சிறு விளம்பரம்

**Student Visa/ வேலை வாய்ப்பு**

கனடாவில் Students Visa, அவுஸ்திரேலியாவில் தொழிற் சாலை ஒன்றில் 40 வயதுக்குக் குறைந்த தொழிலாளி வேலை. விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும். 140, பலாலி வீதி, திருநெல்வேலி. (பரமேஸ்வராச் சந்தி) T.P.No. 222 2478

**நிறஞ்சனாஸ்** சங்கானை.
அஜித்குமார், வசுந்தராதாஸ், மீனா நடித்த
**சிட்டிசன்**
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00
புதன், வியாழன் மட்டும்
இரவு 8.45 காட்சி
**BLACK EAGLE** (கராட்டிப்படம்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 5.45, 7.45
(சி-139)

**ராஜா**
யாழ்ப்பாணம்.



நான்காவது வாரமாக
அஜித் (இரட்டை வேடம்)
கிரண், மீனா நடித்த
**வில்லன்**
காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (பு.நே)
இயக்கம்: K.S.ரவிக்குமார்.
(சி-151)



ஈழ மண்ணில்
புதுக் கவிதையாய்
விடுதலையில்
தீச்சுடராய்
தேசமெங்கும் பரவி நிற்கும்
மாவீரர்களுக்கு
எமது இதய அஞ்சலிகள்

**அக்கரைகடற்தொழிலாளர்கூட்டுறவுச் சங்கம்**

அக்கரை,
தொண்டமனாறு.


நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

உங்கள் வனப்புக்கு மெருகூட்டிடும் வகையிலான மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும், அழகிய சங்குப் பற்களை பொருத்தவும் மிதப்புப் பற்களுக்கு சிறந்த முறையில் கிளிப் போடவும் நாடுங்கள்

எரிக் கணேஸ்

மூக்குக் கண்ணாடி அகமும், பல் கட்டுமிடமும்
564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P 2222486 (சி-198) கிளை: கொக்குவில், சுன்னாகம்.

# முதல் மாவீரனுக்கு தலைவரின் அஞ்சலி..







## பூரண சுயாட்சித் ...

அடையாளத்தைப் பாதுகாத்து வாழ விரும்புகின்றார்கள். தமது தாயக மண்ணில், தம்மைத் தாமே ஆளும் சுயாட்சி உரிமையோடு வாழ விரும்புகின்றார்கள். இதுவே எமது மக்களின் அரசியல் அபிலாசை. உள்ளான சுயநிர்ணயத்தின் அர்த்த பரிமாணம் இதில்தான் அடங்கியிருக்கிறது. உள்ளான சுயநிர்ணயக் கோட்பாட்டின் அடிப்படையில், எமது தாயக நிலத்தில், எமது மக்கள் தம்மைத் தாமே ஆளக்கூடிய பூரண சுயாட்சி அதிகாரத்துடன் ஒரு தீர்வு முன்வைக்கப்பட்டால், நாம் அத்திட்டத்தை சாதகமாக பரிசீலனை செய்வோம். ஆனால், அதேவேளை, எமது மக்களுக்கு உரித்தான உள்ளான சுயநிர்ணயம் மறுக்கப்பட்டு, பிரதேச சுயாட்சி உரிமை நிராகரிக்கப்பட்டால் நாம் பிரிந்து சென்று தனியரசு அமைப்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை.

## பிரிந்து செல்வதா இல்லையா சிங்கள மக்களே தீர்மானிக்கட்டும்!

இனவாதமும், இனவாத ஒடுக்குமுறையுமே பிரிவினைவாத அரசியலுக்கும் கிளர்ச்சிகளுக்கும் மூல காரணமாக அமைகின்றன. நிலையான சமாதானத்தையும், இன ஒருமைப்பாட்டையும், பொருளாதார மேம்பாட்டையும் சிங்கள மக்கள் விரும்புவார்களானால் இனவாத சக்திகளை இனம் கண்டு ஒதுக்க வேண்டும். தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காண முழு மனதுடன் ஒத்துழைக்க வேண்டும். தமிழ் மக்கள் தமது தாயகத்தில் சுயாட்சி அதிகாரமுடைய ஆட்சியை நிறுவி, தம்மைத் தாமே ஆளுவதற்கு சிங்கள மக்கள் தடையாக இருக்கக் கூடாது. தமிழர்களுடன் சமாதான சகவாழ்வை நடத்துவதா அன்றி தமிழர்களை பிரிந்து செல்ல நிர்ப்பந்திப்பதா என்பது சிங்கள தேசத்தின் அரசியற் போக்கில்தான் தங்கியிருக்கிறது.

நம்பிக்கையூட்டும் நல்லெண்ண சூழ்நிலையில், அரசு-புலிகள் மத்தியிலான பேச்சுக்கள் முன்னேற்றமடைந்து செல்வது எமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. இந்த சமரசப் பேச்சுக்களில் உலக நாடுகள் காட்டும் ஆர்வமும், யுத்தத்தால் சிதைந்து கிடக்கும் தமிழர் தேசத்தை மீளக் கட்டியெழுப்பி, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு புனர்வாழ்வளிக்க முன்வந்திருப்பதும் எமக்கு உற்சாகத்தைத் தருகிறது. நோர்வே அரசின் அனுசரணையுடன் நடைபெறும் சமாதான முயற்சி வெற்றி பெற வேண்டும் என்பதும், இத் தீவில் வதியும் சகல சமூகத்தினரும் ஒற்றுமையாக, ஒத்திசைவாக ஒன்று கூடி வாழ வேண்டும் என்பதுமே எமது ஆழமான அவா. பெரும் நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும் உலகத்தின் நல்லாசியுடனும் நிகழ்ந்து வரும் சமாதானப் பேச்சுக்களை, தமது சுயநல அரசியல் நோக்கங்களுக்காகச் சிங்களப் பேரினவாத சக்திகள் குழப்பிவிட்டால், அது தமிழ் மக்களைத் தனியரசுப் பாதையில் இட்டுச் செல்லும் என்பது திண்ணம்.

## போராட்ட வழிமுறை மாறலாம் போராட்ட இலட்சியம் மாறாது!

அமைதி வழியில், மென்முறை தழுவி, நேர்மையுடனும் நெஞ்சுறுதியுடனும் நாம் எமது போராட்ட இலட்சியத்தை அடைய முயன்று வருகின்றோம். காலத்திற்கு ஏற்ப, வரலாற்றுக் கட்டாயத்திற்கு அமைய, எமது போராட்ட வழிமுறைகள் மாறலாம். ஆனால் எமது போராட்ட இலட்சியம் மாறப்போவதில்லை.

சத்தியத்தின் சாட்சியாக நின்று, எமது மாவீரர்களின் தியாக வரலாறு எமக்கு வழிகாட்டும். அந்த சத்தியத்தின் வழியில் சென்று, நாம் எமது இலட்சியத்தை அடைவோம் என்பது உறுதி.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

## மாவீரர்துயிலும்...

ளில் என்றுமில்லாதவாறு லட்சக் கணக்கில் மக்கள் பங்குபற்றி தமது உணர்வுபூர்வ அஞ்சலிகளைச் செலுத்தினர்.

குறிப்பாக யாழ்.குடாநாட்டிலும் வன்னிப் பிராந்தியத்திலும் மட்டுமல்லாது கிழக்கு மாகாணத்திலும் இவ்வாண்டுக்கான மாவீரர் நாள் நிகழ்வுகளில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்குபற்றியுள்ளனர்.

நேற்றைய மாவீரர் நாள் நிகழ்விற்காக யாழ்.குடாநாடு உட்பட வடக்குக்கிழக்கின் அனைத்துப் பகுதிகளிலும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் பறக்க விடப்பட்டும் மாவீரர் நினைவு வளைவுகள் அமைக்கப்பட்டும் அலங்கார மின்குமிழ்கள் பொருத்தப்பட்டும் மொத்தத்தில் அனைத்துப் பகுதிகளும் எழுச்சிக் கோலமாக காட்சியளித்தன.

நேற்று மாலை அனைத்துப் பகுதிகளிலுமுள்ள மாவீரர் துயிலும் இல்லங்களை நோக்கி மக்கள் அணியணியாக ஆண்கள், பெண்கள், முதியவர்கள், சிறுவர்கள் என அனைத்துத்தரப்பு மக்களும் சென்றனர். அனைத்துத் துயிலும் இல்லங்களிலும் மக்கள் வெள்ளமாகத் திரண்டிருந்தனர்.

மாலை 6.16 மணியளவில் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் இவ்வாண்டுக்கான மாவீரர் நாள் நினைவுரை ஆரம்பமாகியது. தொடர்ந்து 6.35 மணியளவில் அனைத்துப் பகுதிகளிலுமுள்ள இந்து, கிறிஸ்தவ ஆலயங்களிலிருந்தும் துயிலுமில்லங்களிலிருந்தும் மணி ஓசை எழுப்பப்பட்டது. தொடர்ந்து 6 மணி 36 நிமிடமளவில் அனைத்து மக்களும் எழுந்திருந்து அகவணக்கம் செலுத்தினர்.

தொடர்ந்து 6 மணி 37 நிமிடமளவில் ஈகச்சுடர் அனைத்து மாவீரர் துயிலுமில்லங்களிலும் ஏற்றப்பட்டது. ஒவ்வொரு துயிலுமில்லங்களின் மத்தியிலும் அமைக்கப்பட்டிருந்த விசேட பீடம் ஒன்றில் அனைத்து மாவீரர் சார்பிலும் பொதுச்சுடர் ஏற்றப்பட்டது. கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தில் பொதுச்சுடரை விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதி அருணன் ஏற்றி வைத்தார்.

சம காலத்தில் வடகிழக்கின் அனைத்துப் பகுதிகளிலுமுள்ள வீடுகளிலும் மாவீரர் நினைவாக ஈகச்சுடர்கள் ஏற்றி மக்கள் அஞ்சலி செலுத்தினர்.



மாவீரனான மகனின் கல்லறை மீது புரண்டழும் தாய்

## மாவீரர்களுக்குப் பொதுச்சுடரேற்றி..

ஏனைய பகுதிகளிலும் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களிலும் மாவீரர்கள் நினைவாக பொதுச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்ட அதேவேளை மாவீரர்களின் கல்லறைகள் முன்பாக பெற்றோர், உறவினர்களும் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கோப்பாய் துயிலும் இல்லத்தில் பொதுச்சுடரை தளபதி அருணனும் வடமராட்சி எள்ளங்குளம் துயிலுமில்லத்தில் மாலதி படையணி துணைத்தளபதி யமுனாவும் கொடிகாமம் துயிலுமில்லத்தில் பாப்பாவும் தீவகம், சாட்டி துயிலும் இல்லத்தில் அரசியற்துறை நிர்வாகப் பொறுப்பாளர் தங்கனும் பொதுச்சுடரை ஏற்றி வைத்தனர்.

இதேவேளை நெடுந்தீவிலும் நேற்றுமாலை மாவீரர் தினத்தை ஒட்டி சுடரேற்றும் நிகழ்வுகள் இடம்பெற்றன.

வவுனியா ஈச்சங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் பொதுச்சுடரை ஏற்றி வைத்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள விசுவமடு மாவீரர் துயிலுமில்லத்தில் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசனும் , முள்ளியவளை துயிலுமில்லத்தில் சோதியா படையணி சிறப்புத் தளபதி கேணல் துர்க்காவும், துணுக்காய்- ஆலங்குளம் துயிலுமில்லத்தில் மாலதி படையணித்தளபதி லெப்.கேணல் தமிழ்ச்செல்வி ஆகியோர் பொதுச்சுடரை ஏற்றி வைத்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபனும், முழங்காவில் மாவீரர் துயிலுமில்லத்தில் தளபதி லெப்.கேணல் லக்ஸ்மனும் பொதுச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

மன்னார்- ஆட்காட்டிவெளி துயிலுமில்லத்தில் தென்முனைக் கட்டளைத்தளபதி கேணல் ஜெயம், பெரிய பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலுமில்லத்தில் நிதித்துறைப் பொறுப்பாளர் யோ.தமிழ்க்குமரன், வன்னிவிளாங்குளம் துயிலுமில்லத்தில் குட்டிசிறி மோட்டார் படையணி சிறப்புத்தளபதி கேணல் பானு ஆகியோர் பொதுச்சுடரை ஏற்றி வைத்தனர்.

அலம்பில் மாவீரர் துயிலுமில்லத்தில் கடற்புலிகளின் மகளிர் தாக்குதல் துணைத்தளபதி ஜெனி, நெடுங்கேணி- கோடாலிக்கல்லு துயிலுமில்லத்தில் அரசியற்துறை நடுவகப்பணியகப் பிரமுகர் ரமேஸ் அப்பா ஆகியோர் பொதுச்சுடரை ஏற்றினர்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மாவடி முன்மாரி துயிலுமில்லத்தில், கோட்டப்பொறுப்பாளர் உமாராமும், தாண்டியடி துயிலுமில்லத்தில் தளபதி நாகேஸ"ம் , வாகரை துயிலுமில்லத்தில் தளபதி றெஜியும் , தரவை மாவீரர் துயிலுமில்லத்தில் கேணல் கருணாவும் பொதுச்சுடரை ஏற்றி வைத்தனர்.

அம்பாறை மாவட்டம் கஞ்சிகுடிச்சாறு துயிலுமில்லத்தில் மாவட்டத்தளபதி ஜனார்த்தனனும், திருகோணமலை மூதூரில் திருமலை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் பதுமனும் பொதுச்சுடரை ஏற்றினர்.

முல்லைத்தீவு கடற்பரப்பில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட மிதப்பு மேடையில் கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை பொதுச்சுடரை ஏற்றிவைக்க, தரையில் அமைக்கப்பட்ட விசேட மேடையில் மாவீரர் பணிமனை மகளிர் பொறுப்பாளர் அர்ச்சனாவும் பொதுசசுடரை ஏற்றினர்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 28.11.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.